பக்கங்கள்: 12+ VI=பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 23 வெள்ளிக்கிழமை (07-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 101

புலிகளின் வானொலி உபகரண இறக்குமதி:

## புலித்தேவன் உட்பட ஐவருக்கு 'அப்பீல்' நீதிமன்றம் நோட்டீஸ்!

### எதிர்வரும் 31ஆம் திகதி ஆஜராக உத்தரவு

கொழும்பு,மார்ச்7

புலிகள் இயக்கம் வானொலிச் சேவை நடத்துவதற்குத் தேவையான கருவிகள் நோர்வே அரசின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்டதாகத் தெரிவித்து அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. புலிகளின் பிரமுகர் புலித்தேவன் உட்பட எதிர் மனுதாரர்கள் அனைவருக்கும் நோட்டீஸ் (அழைப்பாணை) விடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மனுவை சிங்கள ஜாதிக சங்கத்தின் செயலாளர் கலாநிதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளின் நிலைமை மோசம்!

### 13 பேர் இரத்த வாந்தி; 24பேர் கவலைக்கிடம்

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற கொண்டிருக்கும் கைதிகளில் 24பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. 13 பேர் இரத்த வாந்தி எடுத்த வண்ணம் உள்ளனர்.

உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் கைதிகளை பார்வையிடுவதற்காக நேற்று அங்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துறை விநாயகமூர்த்தி இத்தகவல்களை உதயனுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி பிணையில் விடுதலை செய் அல்லது எம்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை வடக்கு - கிழக்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றி அங்கு விசாரணை செய்" போன்ற கோரிக்கைகளை கைதிகள் முன் வைத்து சாகும் வரையான உண்ணா விரதப் போரைத் தொடர்கின்றனர்.

கைதிகளில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. பலர் இரத்த வாந்தி எடுத்த வண்ணம் உள்ளனர். உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் ரகுபதி சர்மா என்பவர் மயக்க நிலையை அடைந்துள்ளார். சிவனேஸ்வரன் (வயது 55) என்பவர் இதயத் தாக்கத்துக்கு உட்பட்டு நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் கைதிகளில் 64 பேருக்கு எதிராக வழக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பான் பேச்சுகளில் 4 விடயங்கள் ஆராய்வு

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,மார்ச்7

**எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஜப்பானின் ஹக்கோனி நகரில் நடைபெறும் அரசு - புலிகள் ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுகளில் நான்கு விடயங்கள் குறித்து முக்கியமாக ஆராயப்படும்.**

**பேச்சுகளில் அரசு தரப்புப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராகப் பங்குபற்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர்களுக்கான வாராந்த மாநாட்டில் நேற்று தகவல் வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:-

ஜப்பான் பேச்சுகளில் ஆராயப்படவிருக்கும் நான்கு விடயங்களும் வரு

(12 ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த 103 போராளிகளின் 6ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டது. பிரதான நிகழ்வு மட்டக்களப்பு தரவையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணா, மதனா படையணியின் கொடியினை ஏற்றி வைப்பதை முதல் படத்திலும் படைப்பிரிவின் அணிவகுப்பு மரியாதையை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ)

## 'சுடர்ஒளி', 'உதயன்' ஊழியரான விநோதினி அகாலமரணம்!

### வெள்ளவத்தையில் நடந்த கொடூரம்



கொழும்பு,மார்ச்7

கொழும்பு 'சுடர் ஒளி' அலுவலகத்தில் பணியாற்றும் 'உதயன்', 'சுடர் ஒளி' விளம்பரப் பொறுப்பாளர்களுள் ஒருவரான திருமதி விநோதினி திலீபன் (வயது 22) நேற்றிரவு அகாலமரணமானார்.

'சுடர் ஒளி' அலுவலகத்துக்கு அண்மையில் - வெள்ளவத்தை மல்லிகா வீதியில் உள்ள தனது வீட்டுக்கு முன்புறம் - நேற்று இரவு 7.45 மணியளவில் இடம்பெற்ற கொடூர சம்பவம் ஒன்றில் அவர் உயிரிழந்தார்.

அவர் அணிந்திருந்த நகைகளை கத்தி முனையில் கொள்ளையிட முயற்சித்ததாகக் கூறப்படும் இனந்தெரியாத நபர் ஒருவர், அவர் அதற்கு எதிர்ப்புக் காட்டவே கத்தியால் அவரது நெஞ்சில் ஆழமாகக் குத்திவிட்டு அவர் அணிந்திருந்த சங்கிலியையும் பறித்தெடுத்துக்கொண்டு ஓடித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினரை பாலசிங்கம் சந்திக்கிறார்

கிளிநொச்சி,மார்ச்7

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கிறார்.

அடேல் பாலசிங்கமும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனும் இச்சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர் என அறியப்படுகிறது. அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம், நிகழ்கால அரசியல் நடவடிக்கை ஆகியன தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்படும்.

த.வி.கூட்டணித் தலைவர் வி. ஆனந்தசங்கரி இந்தியா சென்றிருப்பதால் இச்சந்திப்பில் கலந்து கொள்ளமாட்டார். கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கும் அவர் சமுகமளிக்கவில்லை. (ஐ)

## தொலைபேசிக் கட்டண அதிகரிப்பு இல்லை

கொழும்பு,மார்ச்7

'ரெலிக்கொம்' தொலைபேசிக் கட்டணங்களில் பாரிய அதிகரிப்பு எதுவும் ஏற்படமாட்டாது என ரெலிக்கொம் நிறுவன தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

'ரெலிக்கொம்' நிறுவனம் தனது தொலைபேசிக் கட்டணங்களை 225 சதவீதத்தினால் அதிகரிக்கப்போவதாக ஊடகங்களில் வெளியான செய்தி தமது நிறுவனத்திற்கு எதிராக குற்றஞ்சுமத்தும் நடவடிக்கையாகும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் 89 பேர் நேற்று தாயகம்திரும்பினர்

### ஏனையோருக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியல்

கொழும்பு,மார்ச்7

மன்னார் கடற்பரப்பில் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 120 தமிழக மீனவர்களில் 26 படகோட்டிகள், கடற் கலவரத்தில் காயமடைந்தவர்களில் ஐந்து பேர் தவிர ஏனையோர் நேற்றுக் காலை தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு மன்னார் பொலீஸாரால் அரச அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னாரில் உள்ள பாடசாலையொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த அவர்கள் அனைவரும் தலைமன்னாரில் உள்ள இலங்கைக் கடற்படையினர் அவர்கள் இந்தியக் கடல் எல்லையில் வைத்து இந்திய கடற்படையினரிடம் நேற்றுக்காலை அரச அதிகாரிகளால் கையளிக்கப்பட்டனர்.

தமிழக மீனவர்களைப் பொறுப்பேற்ற இலங்கை கடற்படையினர் அவர்களை இந்தியக் கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைத்தனர்.

படகோட்டிகளான 26 பேரையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

ரூ.3 கோடி பெறுமதியான

## ஸி.ரி.ஸ்கான் உபகரணம் யாழ்.வைத்தியசாலைக்கு!

### இந்தியா அன்பளிப்பாக வழங்குகிறது

கொழும்பு,மார்ச்7

யாழ்போதனா வைத்தியசாலைக்கு உயர்ந்த தொழில் நுட்ப தரத்திலான நவீன ஸி.ரி.ஸ்கான் இயந்திரம் கிடைக்கவிருக்கின்றது.

சுமார் 3 கோடிரூபா பெறுமதியான இந்த இயந்திரத்தை இந்திய அரசு அன்பளிப்பாக வழங்க முன்வந்திருக்கின்றது.

அடுத்த மாத முற்பகுதியில் இந்தக கருவி யாழ். வைத்தியசாலையில் பொருத்தப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான ஆரம்ப ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக பொறி[illegible] சாலைக்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்தக் கருவி கிடைத்ததும் யாழ் வைத்தியசாலை மருத்துவசேவையின் தரம் பல மடங்கு உயரும் என நிபுணர்கள் கருத்து வெளியிட்டனர்.

இந்தக் கருவியை யாழ் வைத்தியசாலைக்கு உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் வைபவத்தில் இந்திய அரசின் அல்லது இந்திய தூதரகத்தின் உயர்மட்டப்பிரமுகர் ஒருவர் கலந்துகொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கருவியை யாழ் வைத்தியசாலைக்குப் பெற்றுக்கொடுக்கும் முயற்[illegible]

## பாடசாலை விடுமுறை நீடிப்பு

கொழும்பு,மார்ச்7

வெசாக் கொண்டாட்டங்களை ஒட்டி பாடசாலைகளின் முதலாம் தவணை விடுமுறைக் காலம் மே மாதம் ஐந்தாம் திகதிவரை நீடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான சுற்றறிக்கை விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்திருப்பதாக இலங்கை [illegible]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




கிளிநொச்சியில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற மகளிர் விவகாரங்களுக்கான உபகுழுவின் கூட்டத்தில் கலந்துகொண்ட அரசு - புலிகள் பிரதிநிதிகளைப் படங்களில் காணலாம். (படம் தேவராஜன்)

## மத்திய கல்லூரியில் வானியல் பாசறை

இடைநிலை விஞ்ஞானக்கழகம் மற்றும் வானியல் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் வானியல் பாசறை இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.கல்விவலயத்தைச் சேர்ந்த வள அணியினரின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இந்தப் பாசறையில் பாடசாலையின் தரம் 9 வகுப்பு மாணவர்கள் 240 பேரும் விஞ்ஞான, சமூகக்கல்வி பாட ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

படமெறி கருவி, வானியல் தொலைக்காட்டி மற்றும் கட்புல சாதனங்களுடன் கூடிய செய்முறை விளக்கமும் அளிக்கப்படும்.

இந்த வானியல் பாசறை மத்திய கல்லூரியில் ஆறாவது தடவையாக நடைபெறுகின்றது. (ஐ-6)

# பெண்கள் சந்தித்த யுத்தப் பாதிப்புகளை சர்வதேசம் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு

## மகளிர் உபகுழு பற்றி புலிகள் பிரதிநிதி தமிழினி

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் உணர்வுகளையும், பிரச்சினைகளையும், தேவைகளையும் தென்னிலங்கையில் உள்ள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டுவதற்கான அங்கீகாரம் மகளிர் உபகுழு மூலம் எமக்குக் கிடைத்திருக்கின்றது. இதுவரை காலமும் யுத்தத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், அவர்களுடைய தேவைகள் என்பவற்றை இச்சமாதானப் பேச்சுக் குழுவினருக்கும் வடக்கு - கிழக்கு மனிதாபிமான உடனடித் தேவைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள உபகுழுவுக்கும் வெளியுலகிற்கும் எடுத்துக்கூறும் பெரும் பணியை மகளிர் உபகுழு மேற்கொள்ளவுள்ளது.

- இவ்வாறு நேற்று கிளிநொச்சி சமாதான செயலகத்தில் நடைபெற்ற மகளிர் உபகுழுக்கூட்டத்தின் நிறைவில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மகளிர் உபகுழுவின் - புலிகள் தரப்பு குழுவின் - தலைவர் தமிழினி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இச்சந்திப்பில் கலந்துகொண்ட அரச



தரப்பில் அங்கம் வகிக்கும் தென்னிலங்கைப் பெண்களுக்கு எமது பெண்கள் மற்றும் குழந்தைகளின் பிரச்சினைகள், கடந்தகாலச் சம்பவங்கள் என்பவற்றை விரிவாக எடுத்துக்கூறினோம். அவர்கள் இதனை தென்னிலங்கையில் உள்ள பெண்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என்பதற்காக.

எமது மக்கள் சமாதானத்தில் நம்பிக்கையுடனும் அக்கறையுடனும் உளளார்கள். சில சிங்களப் பேரினவாதச சக்திகள் சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்பதையும் நாம் அவர்களுக்கு வெளிப்படையாக எடுத்துக்கூறியுள்ளோம் எமது மக்களின் அடிப்படை உரிமைகளுடனான ஒரு புறச்சூழல் முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றை ஏற்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் வேறு எந்த நடவடிக்கைகளும் பயனதரமாட்டா எனவும நாம் அவர்களிடம் கூறியுள்ளோம் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

தொடர்ந்து பல சந்திப்புக்களை நாம் அவர்களுடன் நடத்தவுள்ளோம். இச்சந்திப்பில் சில தீர்மானங்களையும் நாம் எடுத்துள்ளோம் - என்றார்.(ஐ-8)

# இலங்கைத் தமிழ் அகதியிடம் தமிழகத்தில் பணம் பறிமுதல்!

இராமேஸ்வரம்,மார்ச்7

மன்னார் பேசாலையில் இருந்து கடந்த செவ்வாயன்று இராமேஸ்வரம் போய்ச்சேர்ந்த இலங்கை அகதி ஒருவரின் நாலரை லட்சம் ரூபா பணத்தை மண்டபம் அகதிகள் முகாம் அலுவலர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டானியல் சாய்ராஜ் என்பவர் தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் தனுஷ்கோடி, அரிச்சமுனைப் பகுதியைச் சென்றடைந்தார். அங்குள்ள காவல் நிலையத்திற்குச் சென்று தாம் இலங்கை அகதிகள் என்று தெரிவித்ததை அடுத்து அவர்கள் சோதனை, விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு மண்டபம் தனித்துறை ஆட்சியர் அலுவலர்கள் - டானியலின் உடைமைகளைத் துருவித் துருவிச் சோதனை இட்டனர். அப்போது டானியலின் பெட்டி ஒன்றில் இருந்த நாலரை இலட்சம் ரூபா (இலங்கை நோட்டுக்கள்) பணத்தை எடுத்தனர். இவ்வளவு தொகைப் பணம் உமக்கு எவ்வாறு கிடைத்தது? இதையும் கொண்டு ஏன் இங்கு வந்தீர்கள்? என்று அலுவலர்கள் டானியலைக் குடைந்தெடுத்தனர்.

தாயகத்தில் தனக்குச் சொந்தமாக இருந்த காணியை விற்று, இங்கு வந்து சீவிப்பதற்குத்தான் இந்தப் பணத்தைக் கொண்டு வந்ததாகவும், தனுஷ்கோடியில் தன்னை முதலில் விசாரணை செய்தவர்கள் இந்தப் பணம் பற்றி எதுவும் கேட்காததால் தானும் எதுவும் சொல்லவில்லை என்றும் டானியல் கூறினார். தற்போது டானியலிடம் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மண்டபம் தனித்துணை ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தாமலே 12 இந்திய மீனவர்கள் விடுவிப்பு!

## பொலீஸார் மீது வழக்குத் தொடர மன்னார் நீதிவான் கட்டளை

மன்னார்,மார்ச்7

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 17 இந்திய மீனவர்களில் 12 பேரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தாமலே விடுவித்த பொலீஸார் எஞ்சிய 5பேரை மட்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

17 இந்திய மீனவர்களையும் வைத்திய சிகிச்சையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு நீதிவான் எம்.பி.முகைதீன் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார். ஆயினும், ஐவர் மட்டுமே மன்னார் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், ஏனைய 12 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் விடுவித்த பொலீஸார் மீது நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்றப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

விளக்க மறியலில் உள்ள இந்திய மீனவர் அனைவரையும் எதிர்வரும் 20ஆம் திகதி மீண்டும் ஆஜர் படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். ஏற்கனவே 12 இந்திய மீனவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)

# நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தும் அரசின் யோசனைகள் எதிர்க்கட்சிகளிடம் கையளிப்பு

கொழும்பு,மார்ச்7

இன்றைய அரசமைப்புச் சட்டத்துடன் மோதும், 1978 ஆம் ஆண்டுக்கு முன் கொண்டுவரப்பட்ட சட்டங்களை ரத்துச் செய்வதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்குவது உட்பட நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவதற்கான அரசின் யோசனைகள் கட்சித் தலைவர்களிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த யோசனைகளின்படி, இன்றைய அரசமைப்பு சட்டத்தை உருவாக்குவதற்கு முன் - அதாவது 1978 ஆம் ஆண்டுக்கு முன் கொண்டுவரப்பட்ட சட்டங்களை ஆராயவும், அவை தொடர்பாக நாடாளுமன்றத்திற்கு ஆலோசனை வழங்கவும் விசேட நியாயச்சபை ஒன்று அமைக்கப்படும்.

ஏதாவது ஒரு சட்டம் அல்லது ஒரு விதி அரசமைப்புச் சட்டத்துடன் மோதுவதாக அந்த நியாயச்சபை அறிவித்தால் அதனை ரத்துச் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் வழங்கப்படும்.

நாடாளுமன்ற முறையைப் பலப்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில இந்த யோசனைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நாடாளுமன்றக்குழு அறையில் குழுக்களின பிரதித் தலைவர் சிறி அந்திராஹென்னதி தலைமையில் நடைபெற்ற கட்சித தலைவர்களின் கூட்டத்தில் யோசனைகள் கையளிக்கப்பட்டன.

நியமிக்கப்படும் நியாயச்சபையின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். உறுப்பினர்களாக 10 பேர் இருப்பர். அரசமைப்புச் சபையினால் அவர்கள் நியமிக்கப்படுவர். நியாயச் சபையின் அறிக்கை நேரடியாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

இச்சபையின்கீழ் 17 உபகுழுக்கள் நியமிக்கப்படும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இக குழுக்களுக்குத் தலைமைவகிப்பர்.(ஐ)

## காணவில்லையென முறைப்பாடு

கடந்த டிசெம்பர் மாதம் வன்னிப் பகுதிக்குச் செல்வதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்ற தனது கணவர் இன்னும் வீடு வந்து சேரவில்லை என்று அவரது மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 27 திகதி வன்னிக்குச் சென்ற காளிமுத்து ஜீவராஜா (வயது29) என்பவரே காணாமற் போனவராவார் இவர் ஈ.பி.டி.பி. அமைப்பிலிருந்து விலகியவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-10)

# ஆசிரியர்களின் போராட்டத்துக்கு சங்கங்களின் ஆதரவு திரள்கிறது

காரைதீவு,மார்ச்7

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் நடத்தவிருக்கும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கமும் ஸ்ரீலங்கா முஸ்லிம் ஆசிரியர் காங்கிரஸும், கல்முனை மாவட்ட அதிபர்கள் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஏ.அப்துல் அசீஸ், செயலாளர் எம்.எஸ்.அலிஸ், முஸ்லிம் ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் ஏ.காதர், செயலர் எம்.மிராசாஹிபு, அதிபர் சங்கத் தலைவர் ஏ.எச்.ஏ.பஷீர், செயலாளர் எம்.எம்.றஹீம் ஆகியோர் நேற்றுத் தமது ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர்.

தொண்டர் ஆசிரிய நியமனங்கள் உட்பட 10 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கமும் ஆதரவு வழங்கும் என்று அதன் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்துள்ளார். (ஐ)



கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்ற வளாகத்தின் தோற்றம்.

# கிளிநொச்சியில் நீதிமன்ற வளாகம் அடுத்தவாரம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்7

கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்ற வளாகத் திறப்பு விழா எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நீதிமன்றத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நீதித்துறை சார்ந்த பல முக்கிய பிரமுகர்கள் இத திறப்பு விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-8)

# நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகள் பொதுமக்களுக்கு விற்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்7

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கடந்த 22 வருடங்களுக்கு முன்பு நாவற்குழியில் அமைக்கப்பட்ட 298 வீடுகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன என்று மாவட்ட முகாமையாளர் சுமாசிலாமணி அறிவித்துள்ளார்.

இந்த 298 வீடுகளும் 3 வகையாகப் பிரிக்கப்பட்டு கூரையுடன் கூடிய வீடுகள் 75 ஆயிரம் ரூபாவுக்கும், கூரையின்றிய கட்டடங்கள் மட்டும் 50 ஆயிரம் ரூபாவுக்கும், அத்திபாரம் மட்டும் உள்ள வீடுகள் 25 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

தலா 800 சதுர அடி தரைப்பரப்பளவுள்ள இந்த வீடுகளை கொள்வனவு செய்ய விரும்புவோர் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்பு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

கடந்த 1981 ஆம் ஆண்டு இந்த வீடுகளை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வந்த வேளையில், 1983 ஆம் ஆண்டு ஆரம்பமான உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக அவை முற்றுப்பெறவில்லை.

இவ்வாறான நிலையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த குருநகர் மக்கள் இந்த வீடுகளில் வசித்துவந்தனர். பின்னர் யுத்தம் உக்கிரமடைந்ததும் ஷெல்வீச்சுக்களால் சில வீடுகள் சேதமடைந்தன. இதனைப் பயன்படுத்தி திருடர் கோஷ்டிகள் தமது கைவரிசையைக் காட்டின. வீட்டின் கூரைகள், கதவுகள் களவாடப்பட்டன.

இந்த வீடுகளுக்கான நீர் விநியோக வசதிகளை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை விரைவில் ஏற்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-117)










# பாக். வீரர்கள் பலர் திடீர் ஓய்வு அறிவிப்பு

இஸ்லாமாபாத்,மார்ச்7

கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி படு



தோல்வி அடைந்து 'சுப்பர் சிக்ஸ'க்கு செல்வதற்கான வாய்ப்பை தவறவிட்டதை அடுத்து பாக். அணியின் முன்னணி வீரர்கள் பலர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளனர்.

உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணிகளுள் ஒன்றாக பாகிஸ்தான் கருதப்பட்டது. ஆனால், எதிர்பாராமல் முதல் சுற்று ஆட்டங்களில் படுதோல்வி அடைந்தது. தொடரை விட்டு வெளியேறியது அந்த அணி.

இப்படுதோல்விக்கு அவ்வணிக்குள் நிலவுகின்ற உட்கட்சி பூசலே காரணமென பாகிஸ்தான்

(10 ஆம் பக்கம் பார்க்க)




# போட்டியிலிருந்து கிலெஸ்பி விலகல்

கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரின் எஞ்சியுள்ள ஆட்டங்களிலிருந்து ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜேசன் கிலெஸ்பி விலகியுள்ளார்.

வலது குதிக்காலில் ஏற்பட்ட காயமே இதற்குக் காரணம்.

அவருக்குப் பதிலாக இடதுகை வேகப்பந்து வீச்சாளரான நேதன் பிரக்கன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இதுவரை



11 ஒருநாள் ஆட்டங்களில் பங்குபற்றியுள்ளவர் பிரக்கன்.

முன்னணி பந்துவீச்சாளரான ஷேன

(10 ஆம் பக்கம் பார்க்க)

## SHARP Action of the day



பந்தை தாவிப்பிடிக்கப் பாயும் கென்ய அணி வீரர்

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# கிரிக்கெட் போட்டியில் படுதோல்வி: மன்னிப்புக் கோரினர் பாக்.வீரர்கள்

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் ஏற்பட்ட தோல்விகளுக்காக பாகிஸ்தான் அணி வீரர்கள் ரசிகர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

இத்தொடரில் நெதர்லாந்து, நமீபிய அணிகளை மாத்திரமே பாகிஸ்தான் வென்றது. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிடம் முதலில் பாகிஸ்தான் தோல்வியடைந்தது.

இறுதியில் இந்தியாவிடமும் அது தோல்வியைச் சந்தித்தது. ஸிம்பாப்வே அணியுடனான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சிறந்த அணியாக இருந்து வந்த பாகிஸ்தான், இத்தகைய தோல்வியை அடைந்தமை அந்நாட்டு ரசிகர்களை மிகவும் கோபமடையச் செய்துள்ளது.

எனவே, ரசிகர்களிடம் மன்னிப்புக் கோரி கேட்டதனில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் இதுவரை இல்லாத அளவுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா கோரிக்கை

உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியை பகல் நேர ஆட்டமாக மாற்ற வேண்டுமென இந்தியா கோரியுள்ளது.

இத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி போர்ட் எலிஸபெத்தில் பகல் நேர ஆட்டமாகவும் இரண்டாவது அரையிறுதிப் போட்டி டேர்பன் நகரில் பகல் - இரவு ஆட்டமாகவும் நடைபெறவுள்ளன.

இரவில் மின்னொளியில் துடுப்பெடுத்தாடும் அணி சிரமத்தை எதிர்நோக்குமெனக் கருதப்படுகிறது. இத

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பழிதீர்க்கும் படலம்!



வி.பி.கிண்ணத்துடன் ஆஸி அணியினர்.

கிரிக்கெட் உலகக் கிண்ண கொண்டாட்டத்தின் இரண்டாம் பாகம் இன்று அரங்கேறுகிறது. அதன் முதல பாகம் சில சோகங்கள், சில மகிழ்ச்சிகள் எனப் பல்சுவை உணர்வுகளைத் தந்தது. வெப்சிலிர்க்க வைத்தவை சில ஆட்டங்கள் மட்டுமே. தென்னாபிரிக்காவின் கனவை மழை வந்து கழுவிச் சென்றது. எதிர்பார்த்த - பலமான அணிகள் என்று கணிக்கப்பட்ட - மேற்கிந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து என்பவையும் தாயகம் நோக்கி புறப்பட்டாயிற்று. எதிர்பார்க்காமலேயே சிம்பாப்வேயும் கென்யாவும் 'சுப்பர் சிக்ஸ'க்குள். இனி அடுத்த கட்டம்.

இன்னும் பரபரப்பான எதிர்பார்ப்புக்குரிய கட்டம். நாட்டின் பெயரால், விளையாட்டின் பெயரால் அனைவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டிய கட்டம் ஏதாவது இரு அணிகள் இங்கே வெளியேறியாக வேண்டும். அவை எவை என்பது தான் இப்போது கேள்வி. பலம் குன்றியவை என்று கருதப்படும் கென்யாவும் சிம்பாப்வேயும் அந்த அணிகளா? உறுதியாகச் சொல்ல முடியாது. இம்முறை புள்ளியிடல் முறை அப்படியானது. கென்யா ஒரு ஆட்டத்தில் வென்றால் அரையிறுதிக்குச் செல்லும் சாத்தியம் அதிகம். இந்த நிலையில் எதுவும் நிச்சயம் இல்லை. அதிர்ஷ்டம் தொடர்ந்தும் கென்யாவுடன் இருக்கக் கூடும்.

இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இது பெரும் சோதனைக் காலம். அவை சந்திக்க வேண்டிய இரு அணிகள் மிகப் பலமானவை. போராடியே ஆகவேண்டும். போராட்டக் குணம் இலங்கையுடன் கூடப் பிறந்தது.

நம்பிக்கைக்குரிய வீரர்கள் அனைவரும் நம்பும் வித்தத்திலேயே நடக்க வேண்டும். இங்கே வெற்றிகளுக்கு அதிர்ஷ்டத்தைவிட திறமையையே நம்பியாக வேண்டும். அதனைப் பூரணமாக வெளிப்படுத்த வேண்டும்.

ஆஸ்திரேலியர்களுக்கு அரையிறுதிக்குச் செல்ல இன்னும் ஒரு வெற்றி போதும். அவர்கள் செல்லவதில் எந்தச சந்தேகங்களும் ஏற்படப்போவதில்லை. இந்தியா இரண்டு ஆட்டங்களில் வெல்லவேண்டும். ஒன்றில் வென்று மற்றைய ஆட்டம் கைவிடப்பட்டால் அல்லது சமநிலையில் முடிவடைந்தாலும் பரவாயில்லை. இரண்டாம் கட்டத்தை அது தாண்டிவிடும். இலங்கை, நடக்கப்போகும் மூன்று



ஐ.சி.சி. கிண்ணத்துடன் இலங்கை அணியினர்.

ஆட்டங்களில் நிச்சயம் இரண்டு ஆட்டங்களை வென்றே ஆகவேண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# எச்சரிக்கையுடன் ஆடுங்கள்; பொன்ரிங் வேண்டுகோள்

'சுப்பர் சிக்ஸ்' ஆட்டங்களில் மிகவும் எச்சரிக்கையாக ஆடுங்கள், எந்த அணியையும் எளிதாக எடை போட வேண்டாம் என ஆஸி. அணியின் தலைவர் ரிக்கி பொன்ரிங் தமது அணியின் வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முதலாவது 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்துக்காக இலங்கை - ஆஸ்திரேலியா அணிகள் செஞ்சூரியன் மைதானத்தில் கடும் பயிற்சியில் ஈடுபட்டன.

பயிற்சியினிடையே செய்தியாளர்களுக்கு ஆஸி. அணியின் தலைவர் ரிக்கி பொன்ரிங் பேட்டியளித்தார்.

"இலங்கை அணி தற்போது நல்ல திறனில் உள்ளது. தென்னாபிரிக்காவின் ஆடுகளங்களில் எப்படி ஆடுவது? என்பதை அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் கற்றுக் கொண்டுவிட்டனர்.

"இந்தத் தொடரின் ஆரம்பத்திலிருந்தே அந்த அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசி வருகின்றனர். எனவே, இலங்கை அணியை எளிதாக எடைபோட்டுவிட வேண்டாம் என்று நான் எங்கள் அணி வீரர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளேன்.

"தொடர்ந்து பெற்ற வெற்றிகளி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சச்சின், வாஸ் முன்னணியில்



கேப்டவுன்,மார்ச்7

கிரிக்கெட் உலகக்க கிண்ணத் தொடரின் முதல் சுற்றின் முடிவில் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு வரிசையில் முறையே சச்சின் டெண்டுல்கர், சமிந்த வாஸ் ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.



6 ஆட்டங்களில் பங்குபற்றிய சச்சின் 469 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் ஒரு சதம், 4 அரைச்சதங்களும் அடக்கம்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த எச்.கிப்ஸ் 384 ஓட்டங்களைப் பெற்று இரண்டாம் இடத்திலும், இலங்கை அணித்தலைவர் சனத் ஜயசூரிய 269 ஓட்டங்களைப் பெற்று மூன்றாம் இடத்திலும், (10 ஆம் பக்கம் பார்க்க)









# நாடக வீடியோ படக்காட்சி

நாடக வீடியோ பிரதிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக "செயல் திறன் அரங்க இயக்கத்தினர்" ஆடிய பாதம் வீதி (சிறிய முத்துத்தம்பி பாடசாலை முன்பாக) திருநெல்வேலியில் உள்ள தமது காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் "தேட்டம்" என்ற பெயரிலான நாடக வீடியோ படக்காட்சியை நடத்தி வருகிறார்கள்.

புதிதாக நாடகங்களை தயாரித்து மேடையேற்றுவோர் அவற்றை வீடியோ ஆவணப்படுத்தி அதன் பிரதி ஒன்றினையும் ஏற்கனவே உங்களிடம் உள்ள நாடக வீடியோ பிரதிகளினையும் காப்பகத்திற்கு தந்துதவுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

தேட்டம் தொடரில் நாளை சனிக கிழமை மேற்படி அலுவலகத்தில் காலை 10 மணிக்கு குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "அன்னையிட்ட தீ" எனும் நாடக வீடியோ படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது. (ஓ)


## நான்காம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

அன்னை மடியில் 23 - 02 - 1931



அரன் அடியில் 19 - 02 - 1999

**திருமதி சரஸ்வதியம்மா செல்வரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை - ஈவினை அ.த.க.பாடசாலை)

திதி:- 07.03.2003 பூர்வபக்கச் சதுர்த்தி

*நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தது அம்மா!*
*நானிலத்தில் உங்கள் புகழ் மறையவில்லை*
*நாம் உங்கள் நினைவாகவே வாழ்கின்றோம் தாயே!*

கணவர்: லயன் செ.செல்வரத்தினம் (ஜே.பி.)
(ஓய்வு பெற்ற அதிபர்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

*"செல்வம்"*
*சுவினை தெற்கு,*
*சுன்னாகம்.*

(15216)


## பளைக் கோட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

தென்மராட்சி,மார்ச்7

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஐம்பது சதவீத ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகக் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி கோட்டத்தில் உள்ள 12 பாடசாலைகளில் 138 ஆசிரியர்களுக்கு ஆளணி உள்ளபோதிலும், 73 ஆசிரியர்களே தற்போது கடமையில் உள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின்போது சொந்த இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்ற சில ஆசிரியர்கள் பின்னர் தத்தமது இடங்களுக்கு நிரந்தர இடமாற்றங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர் என்றும் இதனாலேயே ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(எ-117)

# கடந்த ஆண்டு பதிவான வாகனங்கள்

கொழும்பு, மார்ச்7

கடந்த ஆண்டு புதிதாக ஒரு லட்சத்து 13ஆயிரத்து 351 வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என மோட்டார் வாகன, போக்குவரத்து ஆணையாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் 18 லட்சத்து 92 ஆயிரத்து 367 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் -

இவற்றில் மோட்டார் சைக்கிள்கள மாத்திரம் 9 லட்சத்து 23 ஆயிரத்து 467 எனவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

*யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி.*
*இல.54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*

பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(இந்த மாதம் 19ஆம் திகதி வரையும்)

(15256)



## G.A.Q.2004 பேராதனை

☆ பேராதனை பல்கலைக்கழக பதிவுகளுக்குரிய விண்ணப்பப்படிவங்கள் வந்து சேர்ந்துள்ளன. இதற்குரிய பதிவுகளை 30-03-2003 வரை செய்து கொள்ளமுடியும்.

☆ விவரங்களையும் பதிவு விண்ணப்பப் படிவங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விவரங்களுக்கு:
S.அருள்நங்கை (15249)

**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி, யாழ்.**


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 27**

நாளை (08.03.2003) நடைபெறவுள்ள ஸிம்பாப்வே - நியூஸிலாந்து ஆட்டத்தில் நியூஸிலாந்து அணித்தலைவர் பிளமிங் 50 ஓட்டங்கள் எடுப்பாரா?

முழுப்பெயர் : ..................................................
முகவரி : ..................................................
அ.அட்டை எண்: ..................................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (08.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 27, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

**உதயன்**



அருணல்ஸ் தரும்
விசேட கூப்பன்களுக்காகக்
காத்திருங்கள்




### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..................................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..................................)

**உதயன்** 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ..................................................
முகவரி : ..................................................
அ.அட்டை எண்: ..................................................

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருணல்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# புதிய யோசனை: நடைமுறைக்கு வருமா?

விடுதலைப் புலிகள் தமது காவலில் இருந்த சிப்பாய் ஒருவரையும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் விடுவித்திருக்கின்றார்கள்.

இன்றுடன் தனது பணியைப் பூர்த்திசெய்து வெளியேறும் கண்காணிப்புக் குழுவின் பழைய தலைவரையும் புதிதாகப் பொறுப்பேற்கும் தலைவரையும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியதை அடுத்தே தலைவர் வே.பிரபாகரன் இவர்களை விடுவிக்கும் உத்தரவை விடுத்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் சமாதானத்தின் மீது எத்தகைய நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் இருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டும் நல்லெண்ண நடவடிக்கையாகவே கைதிகள் இருவரையும் விடுதலை செய்வதாகவும் அவர் அறிவித்திருக்கின்றார்.

யுத்தநிறுத்த மீறல் காரணமாக அரசு - புலிகள் இரு தரப்பினராலும் கைதுசெய்யப்படும் மறுதரப்பு உறுப்பினர்கள் அல்லது துருப்பினர் விடயத்தில் எழுகின்ற தேவையற்ற சிக்கலைத் தவிர்ப்பதற்கு புதிய யோசனை ஒன்றையும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது புலிகளின் தலைவர் முன்வைத்திருக்கின்றார்.

இவ்வாறு கைதுசெய்யப்படுவோரை அந்தந்தப் பகுதிகளுக்குரிய பொலீஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தாமல் உடனடியாகவே கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்துவிட வேண்டும். மேற்கொண்டு கண்காணிப்புக் குழுவே அந்த விவகாரத்தைக் கையாண்டு இணக்கமான முடிவை எடுக்கலாம் என்றும் புலிகள் தமது யோசனையில் தெரிவித்திருக்கிறார்கள்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் அடிப்படையிலான போர்நிறுத்த உடன்பாடும் இரண்டு தரப்பினதும் அரசியல் தலைமைகளால் பேசி முடிவு செய்யப்பட்டவை. சட்டரீதியான ஏற்பாடுகள் அல்ல அவை.

அத்தகைய அரசியல் ரீதியான தலைமைத்துவங்களின் உடன்பாட்டில் எழுந்த ஒப்பந்த விவகாரங்களை சட்ட முறையான நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் இழுப்பதால் வீணான பல சிக்கல்கள், குழப்பங்கள் ஏற்படுகின்றன. புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் யுத்தநிறுத்த உடன்பாட்டின் நடைமுறைச் செயற்பாட்டை தேவையற்ற சட்ட ரீதியான தலையீடுகள் பாதிப்புற வைக்கின்றன; கேள்விக்குள்ளாக்குகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் பலவற்றுக்குச் செயலுருக் கொடுப்பதற்காக சட்டப் போக்குகளில் வளைந்து கொடுக்கும் தன்மையை பல சமயங்களில் இருதரப்பும் கடைப்பிடித்து வந்திருக்கின்றன என்பது வாஸ்தவம்தான். எனினும், இயன்றளவுக்கு அந்தப் போக்கை புரிந்துணர்வோடு விரிவுபடுத்துவதுதான் சமாதான நடைமுறைகளை மேலும் வலுவாக முன்னேற்ற உதவும் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

இந்த அடிப்படையில், இரு தரப்பினாலும் யுத்தநிறுத்த மீறல் தொடர்பாகக் கைதாவோரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போது புலிகளின் தலைமையிடம் முன்வைத்திருக்கும் ஆலோசனை வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்துள்ளது.

இத்தகைய ஆலோசனை குறித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டதாகக் கண்காணிப்புக் குழுவும் தெரிவித்துள்ளது.

புலிகளின் தலைவர் தெரிவித்த ஆலோசனையை கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டு, இதுகுறித்து அரசுத் தரப்பிலிருந்து இணக்கத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக உறுதியளித்தனர் என்று புலிகளின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த மீறலின் பெயரால் கைதாவோரின் பிரச்சினை எதிர்காலத்தில் பூதாகரமாகி, வீணான சர்ச்சைகள் தோன்றுவதைத் தவிர்ப்பதற்கான நல்லதோர் சமிக்ஞையாக இந்த அறிவிப்புக்களைக் கொள்ளலாம்.

ஆனால், வீணான சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இத்தகைய யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசுத் தரப்பு இணங்குமா? அரசுத் தரப்பு இணங்கினாலும் இலங்கைப் பாதுகாப்புப் பிரிவினர் அதற்கு ஒத்துழைப்பு நல்க முன்வருவார்களா? அவர்கள் ஒத்துழைக்க முன்வந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சம்மதிப்பாரா?

பிரஸ்தாப யோசனை இணக்கமாக நடைமுறைப்படுத்தப்படுவது கொழும்பின் போக்கில்தான் தங்கியிருக்கின்றது.

# தெல்லிப்பழை மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு ஏற்பாடு

வலி.வடக்கு,மார்ச் 7

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் நீண்ட காலத்தின் பின்னர் செய்யப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து பல்வேறு இடங்களிலும் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கியமையால் பிரேத பரிசோதனைகளும் இடைநிறுத்தப்பட்டு இருந்தன.

வலி.தெற்கு மற்றும் வலி.வடக்கின் சில பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். இந்நிலையில் திடீர் மரணங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மரண விசாரணைகள் செய்வதற்காகச் சடலங்கள் யாழ்வைத்தியசாலைக்குக் கொண்டுவரவேண்டிய நிலை காணப்பட்டது. இதனையடுத்தே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் வலி.மேற்கு பகுதியில் உள்ள வைத்தியசாலையிலும் பிரேத பரிசோதனைகள் இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.(ஓ-86)

## திருவீதி மான்மியம்

இடம் பல இருந்துமென்ன
இப் பேருந்தில் ஏற மாட்டார்
நடை கெட்ட கிழடு மட்டும்
நடுங்கியே இதனில் ஏறும்
கட கடத்த மினிபஸ் ஒன்று
கக்கிய புகையோடு நண்ண
அடிபட்டு இதனில் ஏறி
ஆனந்தம் மிகவும் கொண்டு
துடியிடை மடவார் அண்டை
துணையென அருகமர்வர்
அட இவர் கொள்ளும் காதல்
ஆறு மாதமும் நிலைப்பதில்லை.

- விகட கவி.

## சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்

# இலங்கையின் சதி முயற்சிக்கு இந்தியா அடிபணியக்கூடாது!

## பிரதமர் வாஜ்பாய்க்கு வை.கோ. கடிதம்

இலங்கை அரசின் நிர்ப்பந்தம் காரணமாக தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் பெரும் வளம் அளிக்கும் சேது சமுத்திரத் திட்டத்தில் மாற்றங்கொண்டுவர இந்திய மத்திய அரசு முயல்வதாக ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வை.கோ.குற்றஞ் சாட்டியுள்ளார். இத்திட்டத்தை நிறுத்தத்தான இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே பாலம் கட்ட இலங்கை முயல்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு வை.கோ. கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் வை.கோ.கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் கிழக்குக் கடல் பகுதியில் இருந்துவரும் கப்பல்கள் வளைகுடா உள்ளிட்ட மேற்குக் கடல் பகுதிக்கு செல்ல இலங்கையைச் சுற்றிக்கொண்டுதான் வரவேண்டிய நிலையுள்ளது. இதனால் தான் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரினோம்.

இத்திட்டத்தின் படி இலங்கை - தமிழகத்துக்கு இடையிலான கடற்பகுதி பெரிய கப்பல்கள் செல்லும் அளவுக்கு ஒரு பகுதியை ஆழப்படுத்த முடிவுசெய்யப்படிருந்தது. ஆனால், இத்திட்டம் நிறைவேறினால் தனது வர்த்தகம் பாதிக்கப்படும் என்று இலங்கை கருதுகிறது.

சேது சமுத்திரக் கால்வாய் வெட்டப்பட்டுவிட்டால் பெரிய கப்பல்கள் இலங்கையைச் சுற்றவேண்டிய அவசியம் இருக்காது. அதன் பிறகு பன்னாட்டுக் கப்பல்கள் தமிழக துறைமுகங்களுக்குத்தான் பொருள்களை இறக்கி ஏற்றவும், எரிபொருள்களை நிரப்பவும் வரும். இதனால் அந்தக் கப்பல் நிறுவனங்களுக்கு பணம் மிச்சப்படும். அதேநேரத்தில் தமிழகம் பெரிய சந்தையாக மாறும்.

இதனால் சேது சமுத்திரத் திட்டத்தை எப்படியாவது சீர்குலைக்க இலங்கை சதி செய்கிறது. கால்வாயை சிறியதாக வெட்டுமாறு மத்திய அரசை இலங்கை வற்புறுத்துகிறது. இதனால் சிறிய கப்பல்கள் மட்டுமே இதன் வழியாக தமிழகத் துறைமுகங்களுக்கு வரமுடியும். பெரிய கப்பல்கள் வழக்கம்போல கொழும்புக்கே செல்லும் நிலை ஏற்படுகிறது.

இலங்கையின் இந்த வற்புறுத்தல்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிகிறது. இதனால் சேது சமுத்திரக் கால்வாயை சிறியதாக அமைக்கவும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

இது போதாது என்று சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தையே முறியடிக்கத்தான் இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையே பாலம் கட்டப்போவதாகவும் இலங்கை அறிவித்துள்ளது. இந்தப் பாலம் கட்டுவதற்கான ஆய்வுப் பணிகளை மத்திய அரசும் ஆரம்பித்துள்ளது. இது தமிழக மக்களுக்கு செய்யப்படும் மாபெரும் துரோகம் ஆகும்.

இந்திய மக்களை ஏமாற்றுவதற்காக அந்தப் பாலத்துக்கு அனுமான் பாலம் என்று பெயரிடப்போவதாகவும் இலங்கை கூறியுள்ளது. இதனால், தமிழகத்துக்கு மிகப்பெரிய நிரந்தர பாதிப்பு ஏற்படும். எனவே இலங்கை அரசின் இந்தச் சதிச் செயலுக்கு இந்தியா அடிபணிந்துவிடக் கூடாது. இந்திய அதிகாரிகள் சிலரும் இலங்கையின் சதிக்கு உடந்தையாக உள்ளதாக தெரிகிறது. இதன் மூலம் 140 ஆண்டு கால தமிழக மக்களின் கனவில் இடிவிழச் செய்ய முயற்சிகள் நடக்கின்றன.

எனவே பிரதமர் வாஜ்பாய் உடனடியாக தலையிட்டு சேது சமுத்திரத் திட்டத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று அக்கடிதத்தில் வை.கோ. கேட்டுக்கொண்டுள்ளார் (எ)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு யாழ்.ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது. மிக அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளதால் சகல தொண்டர் ஆசிரியர்களும் தவறாது இக்கலந்துரையாடலுக்கு சமுகம் தருமாறு யாழ்மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஓ)

# யாழ். - மிருசுவில் இடையே போதிய பஸ் சேவை நடத்துக!

## பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 7

மிருசுவில் - யாழ்.மார்க்கத்தில் காலையிலும் மாலையிலும் போதியளவு பஸ் சேவையை மேற்கொள்ளுமாறு பொது மக்கள், வடபிராந்திய போக்குவரத்துச் சபையைக் கேட்டுள்ளனர்.

குறிப்பாக காலையில் 6.30 மணிக்கும் 8.45 மணிக்கும் இடையே மிருசுவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எந்த ஒரு பஸ்சேவையும் இடம்பெறுவதில்லை இது போலவே மாலையில் 3.45 மணிக்குப் பின்னர் 5.45 மணிவரை யாழ்ப்பாணத்தில் இருந்து மிருசுவிலுக்கு பஸ்சேவை இடம்பெறுவதில்லை.

இதனால், யாழ்ப்பாணம் வந்து கடமைபுரிந்து திரும்பும் அலுவலர்களும் ஏனையோரும் காலையிலும் மாலையிலும் நேரவிரயத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதற்கான மாற்று ஏற்பாடாக காலையில் கொடிகாமத்தில் இருந்து 7 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளப்படும் பஸ் சேவையை மிருசுவிலில் இருந்தும் -

மாலையில் 4.30 மணி மற்றும் 5.15 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமத்திற்கு மேற்கொள்ளப்படும் சேவையை மிருசுவில் வரையும் -

நீடிக்க வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

## நாளை

மாசி 24
சனிக்கிழமை
(08.03.2003)
திதி : பஞ்சமி
பிற்பகல் 5.29 வரை.
நட்சத்திரம்: பரணி
முன்னிரவு 11.29 வரை.
சுபநேரம் : 8.25 - 9.55
ராகுகாலம் : 9.25 - 10.55
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

எதிலும் திருப்தியடையாத மனம் நிம்மதியை விரைவில் சிதைத்துவிடும்.

## பாடசாலை மாணவர்களது

# புத்தகப்பையின் நிறையை கட்டுப்படுத்துவது அவசியம்!

## மருத்துவப்பேராசிரியர் அறிவுறுத்து

கொழும்பு,மார்ச் 7

பாடசாலைச் சிறார்கள் எடுத்துச்செல்லும் புத்தகப்பையின் நிறையை கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் குழந்தை மருத்துவ பேராசிரியர் திருமதி மீனோரிசபாரத்தினம்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். பேராசிரியர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலை மாணவர்கள் தமது எடையின் 20 சதவீதத்துக்கு மேற்பட்ட நிறையுள்ள புத்தகப்பைகளைச் சுமந்து செல்லும் நிலையில் பிற்காலத்தில் அவர்கள் முதுகுவலி போன்ற நோய்களால் பாதிக்கப்பட அதிக வாய்ப்புண்டு.

பாடசாலைப் புத்தகப்பை அதனைச் சுமந்து செல்லும் மாணவனின் எடையின் 10 அல்லது 15 வீத நிறையை விட குறைவானதாக இருப்பதே சிறந்தது.

தற்போது கல்வித்தரத்தை உயர்த்துவதாகக் கூறிக்கொண்டு மாணவர்களின் பாடக்கொப்பிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் கவனஞ்செலுத்தப்படுகின்றது. இதனாலேயே பாடசாலைப் புத்தகப்பைகளின் எடை கூடியுள்ளது. இது குறித்து பெற்றோர்களும் கல்விசார் நிபுணர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, மாணவர்கள்தமது புத்தகப்பைகளையோ அல்லது அத்தகைய வேறு சுமைகளையோ முதுகில் வைப்பதற்காக எடுக்கும் போது கட்டாயமாக தமது முழங்கால்களை மடித்து அமர்ந்து பையை உயர்த்தி எடுக்க வேண்டும்.

- இவ்வாறு பேராசிரியர் தெரிவித்தார் (ஓ)

## பணியினை எனக்குத்தாராய்

பணியேனும் தோணி தன்னில்
பதியேனும் சாகரம் ஏற்றி
சினமேனும் குளத்தைத் தாண்டி
சீர்திருமணத்தை வெல்ல
துணை நிறை அடியார் கூட்டம்
கூடியே துதியார் பாடி
பணியினை எனக்குத் தாராய்
வைத்தீஸ நாதா தேவா

- கவிமணி சந்தமுருகேசனார்

-வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வட்டாரத் திருவிழா இன்று-

# தமிழரை இடம் பெயரவைத்தவரின் தற்போதைய முகவரி சிறைச்சாலை!

**யாழ்.நகரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்த செய்தி உலகெலாம் தெரிந்த பின்னர் அந்தச் செய்தியை செய்தி ஓலையாக எடுத்துச் சென்று அரச மரபுக்கிணங்க ஜனாதிபதிக்குத் தெரிவித்தவர் "சயுமால் குமார" என அழைக்கப்பட்ட ஜெனரல் ரத்வத்தை. இராணுவக் கட்டமைப்பால் கனவிலும் நினைத்திராத யாழ்.நகரைக் கைப்பற்றும் பணியை தன்னிச்சையாக மேற்கொண்டு வெற்றிவாகை சூடிய ஜெனரல் ரத்வத்தையின் தலைவிதி குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. உப்புல் ஜோசெப் பெர்னாண்டோவால் எழுதப்பட்டு "லங்காதீப" நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

"சந்திரிகாவின் மாமன் ஜெனரல் ரத்வத்தை இப்போது சிறையிலாமே? அவர் ஏ9 பாதையைத் திறந்து அப பாதையால் வன்னிக்குள் நுழைந்து எங்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் பிடித்துச் சிறையில் தள்ள நினைத்தாரல்லவா? கடைசியில் என்ன நடந்தது? இதைத்தான் கடவுளின் தீர்ப்பு என்று கூறமுடியும்".

வன்னியில் நாம் சந்தித்த ஒருவர் இவ்வாறு பெருமையுடன் கூறினார். "நாங்கள் எங்கள் பிறந்த மண்ணை விட்டு இடம்பெயரக் காரணமான அவருக்கு ஆண்டவன் தக்க தண்டனை வழங்கியிருக்கிறான் இராணுவம் யாழ்ப்பாணத்துள் பிரவேசித்த போது, யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயர்ந்த சகல குடும்பங்களும் இவ்வாறு சிந்திக்கக்கூடும்.

"தற்கொலைக் குண்டுத்தாக்குதல மூலம் என்னால் நிறைவேற்ற முடியாமற்போன ஒன்று அந்தவழியில அமையாவிடினும் வேறு விதத்தில் நடந்து கொண்டிருக்கிறது"எனப் பிரபாகரன் உட்பட விடுதலைப் புலிகள் சிந்திக்காதிருப்பின் அது புதுமையே.

"அரசாள்வதாயின் அது விளம்பரத்துடன் செய்யப்பட வேண்டும்" சிங்கள மக்கள் இவ்விதம் சிந்திக்கிறார்கள்.

"எதிர்த்தரப்பில் உள்ளவர்களில் ரத்வத்தையே பயங்கரமான மனிதராவார்"

ஐதேகட்சி இவ்விதம் கருதுகிறது. "ரத்வத்தையைக் கட்சியை விட்டு ஓரம் கட்டி வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அந்தச் சேறு முழுக கட்சிக்கும் பூசப்படலாம்."

இது ஸ்ரீ.ல.சு.கட்சி உட்பட்ட எதிரணியின் நிலைப்பாடு.

எப்போதாவது நினைத்துப் பார்த்திருப்பாரா?

அரசியலில் எதுவும் நடக்கலாமே யன்றி இப்படி நடக்காதெனக் கூற இயலாது. அன்று ஏ9 பாதையைக் கைப்பற்றுவதற்காக ஜெனரல் ரத்வத்தை கிழக்கு மாகாண விடுதலைப் புலிகளின் தளபதி கருணாவுடன் போரிட நேர்ந்தது. யுத்தத்தில் வெற்றி பெறும் நோக்கில் முப்படைத் தளபதிகள் சகிதம் உலங்கு வானூர்தியில் யுத்த களத்துக்குச் சென்று படையினரை ரத்வத்தை உற்சாகமூட்டிய வேளையில கருணா காட்டில் மறைந்திருந்து யுத்த உபாயங்களை வகுத்து, ஆயிரக்கணக்கில் அரச படைகளைக கொன்று குவித்ததுடன், யுத்த களத்துக்கு வந்த ஜெனரல் ரத்வத்தை உட்பட்ட படைத் தளபதிகளைக் கொல்வதற்கு முயற்சி செய்தார். இம் முயற்சிகளிலிருந்து ஒரு தடவை ஜெனரல் ரத்வத்தை மயிரிழையில் உயிர்தப்ப நேர்ந்தது. ஜெனரல் ரத்வததையைக் கொல்ல முடியாது போனாலும், அவ்வேளையில் இராணுவத் தைப் பின்வாங்கச் செய்வதில் கருணா வெற்றி கண்டார். அவ்விதம் செயற்பட்ட கருணா இன்று ஏ9 பாதையின் பாதுகாப்பு ஒழுங்குகள் தொடர்பாக இராணுவ உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்த அரசின் உலங்கு வானூர்திகளில் இராணுவ பாதுகாப்புடன் வடகிலிருந்து கிழக்குக்கும், கிழக்கிலிருந்து வடக்குக்கும் சென்று வருகிறார். அதேநேரம் ரத்வததையோ சிறைச்சாலை வாகனத்தில் சிறையதிகாரிகளின் காவலுடன் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்குச் சென்று திரும்புகிறார். அன்று காட்டில் நிலை

## மாற்றார் தோட்டத்தில்

ஆனால், ஜெனரல் ரத்வத்தை என்ன நினைக்கிறார்? அது ரத்வத்தைக்கு மட்டுமே வெளிச்சம். ரத்வத்தை இன்று தடுப்புக்காவலில் உள்ள கைதி. இது உண்மையில் உரோம வரலாற்றின் ஒரு காவியம் போன்றது. உரோம வரலாற்றில் ஜெனரல்கள் அடிமைகளான சந்தர்ப்பங்கள் பல. வெற்றிவாகை சூடிய ஜெனரல்கள் ஒரே இரவில் அடிமைகள ஆக்கப்பட்டு கேலிக்கும் துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு- பின்னர் தங்களை அடிமைகளாக்கிய ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடி அந்த ஆட்சியாளர்களை அடி பணியவைத்துள்ளனர். இவ்வாறு ஜெனரல்கள் பற்றிய விவரங்கள் உரோம வீரகாவியங்களில நிறைந்துள்ளன.

"நான் என்றோ ஒரு நாள் வீரபுருஷனாகவே வெளியில் வருவேன்" என வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வேளையில் தன்னைக் காண வந்த அரசியல்வாதிகளிடம ரதவத்தை கூறியதாக பத்திரிகைகளில் வந்த செய்தியை அவதானித்தால் ஜெனரல் ரதவத்தையும் அவ்வாறான வீரபுருஷனாக பொதுமக்கள் முன் தோன்ற விரும்புவதாக நினைக்கத் தோன்றுகிறது. எதிர்காலம் பற்றி சுகமான கனவு கண்டாலும் அவர் தற்போது அரசியலில் ஒரு கசப்பான, வெறுப்பான கனவையே காண்கின்றார் என்பதில சந்தேகமில்லை. கடந்த சில நாள்களின் முன் அவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின பாதுகாப்பின் மத்தியில் நாடாளுமன்றத்துக்கு வந்தது கனவல்ல. அது கனவாக அல்லாது நிஜமான அனுபவமாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் சிங்கக்கொடி ஏற்றிவைத்து அரசபடைகளின் பாதுகாப்புக்கு மத்தியில் அன்று நாடாளுமன்றத்துக்கு வந்த ஜெனரல் ரத்வத்தை, சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலின் மத்தியில் நாடாளுமன்றத்துக்குத் தான் வர நேரிடுமென

கொண்டிருந்த கருணா இன்று சமாதானப் பேச்சுக்காக உலகத்தின் பல நாடுகளுக்குப் பறந்து செல்கிறார். ஜெனரல் ரத்வத்தையோ நாட்டை விட்டு வெளியேறத்தடை விதிக்கப்பட்ட நிலையில், நான்கு சுவர்களுக்கு மத்தியில் காலம் கழிக்க வேண்டி நேர்ந்துள்ளது.

அரசுக்காகப் பணியாற்றினேன். ஆனால், அரசோ என்னை எதிரிகள் முன்னால் துயிலுரிந்துவிட்டது.

இப்படிக் கூறியது வேறு யாருமல்ல. ஜெனரல் ரத்வத்தையின நெருங்கிய உறவினரான ஹெக்டர் கொப்பேக்கடுவவே இவ்விதம் ஒரு சமயம் கூறியுள்ளார். 1982 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற பின்னர், அவ் வேளையில் பதவியில் இருந்த ஐ.தே.க்ட்சி அவர்மீது நக்ஸலைற் சதிக்குற்றம் காட்டி, பொலீஸ் தலைமைக் காரியாலய நான்காவது மாடிக்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் தலைவர் களும் அவ்விடயத்தில் வாய்மூடி மௌனம் சாதித்ததை பொறுத்துக் கொள்ள முடியாது அவர் இப்படிக் கூறியிருந்தார்.

இன்று அதே நிலை ஜெனரல் ரத்வத்தைக்கும் ஏற்பட்டுள்ளது. இன்று அவருக்கு ஆதரவாகப் பேச கட்சித் தலைமையோ, கட்சியோ முன்வரவில்லை. அன்று அவர் யாழ்ப்பாணத்தை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து வந்த போது அவரை ஏற்றிப்போற்றியவர்கள் இன்று மௌனம் சாதிக்கின்றனர். அவரது யாழ்ப்பாண வெற்றிமூலம் தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்ட பொ.ஐ.முன்னணித் தலைமைத்துவமும் இன்று மௌனம் சாதிக்கிறது. அன்று அவர் யாழ்ப்பாணத்தை விடுவித்து அங்கு உலங்கு வானூர்தியில் சென்று சிங்கக்கொடி

ஏற்றிய வேளையில் அவருக்கு வெற்றிக் கோஷமெழுப்பிய பொது மக்கள் இன்று அவர் சிறைச்சாலை வாகனத்தில் நீதிமன்றம் செல்லும் வேளையில் கேலி செய்து மகிழ்கின்றனர். அன்று அவர் யாழ்ப்பாணத்தை விடுவித்த "சயுமால் குமார"னாகப் போற்றப்பட்டார். இன்று உடதலவின்ன பத்துப் பொது மக்கள் கொல்லப்பட்ட வழக்கில் 'கறுப்புக் குமார'னாகக் கருதப்படுகிறார்.

இது சிங்கள மக்களின் வழக்கம். வடக்கு-கிழக்கு தீவிர யுத்தத்தில் தோல்விக்குப் பொறுப்பானவர் ஜெனரல் ரத்வத்தையே என்பது உண்மையே. கண்டியில் தேர்தல் வாக்கு



கள் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக அவர்மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளதும் உண்மையே. -

அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாகவும் அவர்மீது பல குற்றச்சாட்டுக்கள சுமத்தப்பட்டுள்ளன. அதிகாரங்களைத் தவறான வழியில் பிரயோகித்தது தொடர்பாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன. இன்று அவர் உடதலவின்ன பதின்மரின் படுகொலை தொடர்பான வழக்கின் முக்கிய சந்தேக நபராவார்.

இவ்விதம் என்ன குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருப்பினும், அன்று அவர் யாழ்ப்பாணத்தை விடுவித்திருக்காவிட்டால் பிரபாகரன் இவ்விதம் பேச்சுக்களில் ஈடுபட அக்கறை காட்டியிருக்கப் போவதில்லை. யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்கும் தீர்மானம் மிகுந்த அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறப்பட்டதற்குக் காரணம் அம்முடிவை நடைமுறைபபடுத்துவது மிகுந்த சிரமமளிக்கும் செயலென உணர்ந்து கொண்டமையினாலேயேயாகும். இதனை ஒரு போதும் இலகுவாகச் செய்து முடிக்க இயலாது என்பதாலேயாகும். ரத்வத்தை தன்னிச்சையாக இத் தீர்மானத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தது மட்டுமல்லாமல், அரசபடைகள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவேண்டிய அச்சுறுத்தலுக்கு உட்பட்டு, யாழ்ப்பாணத்துக்குள் முடங்கவேண்டிய நிலை வந்தபோது, கடும் எறிகணைத தாக்குதல்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று இராணுவத்தினரை உற்சாகப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். சரியோ, தவறோ, இராணுவ அதிகாரிகளால் இயலாதெனக் கூறப்பட்ட விடயத்தை -யாழ்ப்பாணத்தைத் தக்கவைக்கும் -பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். யாழ்ப்பாணத்திலிருந்து அரச படைகளை வெளியேற்றும் நெருக்குதல் அதிகரித்ததால், இராணுவத்தினரை யாழ்ப்பாணத்திலிருந்து அப்புறப் படுத்த வேண்டுமெனப் படையதிகாரிகள் பிரஸ்தாபித்த வேளையிலேயே ஜெனரல் ரத்வத்தை யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தார்.

"மேமாதம் 19 ஆம் திகதி படையதிகாரிகளின் ஆலோசனை எனக்குக் கிடைத்தது. மாலை நான்கு மணியளவில் கிடைத்த அத் தகவலில் யுத்தத்தை நிறுத்த அனுமதி கோரப்பட்டிருந்தது. 3ஆயிரம் வரையிலான இராணுவவீரர்கள் களத்தில் உள்ளனர். அவர்கள் தனிமைப்படவுள்ளனர். பின்வாங்கத்தயார் நிலையில் உள்ளோம்" என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு அங்குலம் தானும் பின்வாங்கவேண்டாமென நான் கூறினேன். அவசரமாக வேறு அதிகாரிகளை யுத்த களத்துக்கு அனுப்பினேன். நான் அவ்வேளையில் அரசியல் தீர்மானம் மேற் கொண்டேன். ஆயிரக்கணக்கில் எறிகணைகளை ஏவி படையினருக்கான விநி

யோக மார்க்கத்தைத் தடைசெய்து சிக்கலை ஏற்படுத்தி, அதன் மூலம் பேச்சை ஆரம்பித்து வைக்கப் பிராகரன் எதிர்பார்த்தார். அப்படியான சூழ்நிலையில் நாட்டின் எல்லைகள் பற்றி பேசுவது பிரபாகரனின் நோக்கமாயிருந்தது. இதனால், நான் படையதிகாரிகளின் ஆலோசனைகளை ஏற்கவில்லை. நாம் யாழ்ப்பாணத்தைப் பறி கொடுத்து, எவ்வாறு எமது கிராமங்களுக்குச் சென்று எம் மக்களைச் சந்திக்க முடியும்? காற்சட்டை அணிந்து கொண்டு எமது பிள்ளை குட்டிகளின முன் போய் நிற்க முடியுமா? "இவ்வாறு நான் இராணுவச் சிப்பாய்களிடம் வினாவினேன்." என அன்று யாழ்ப்பாணம் சென்று பாதுகாப்பு நிலைமையை உறுதிப்படுத்திய பின்னர் கொழும்பு திரும்பிய ஜெனரல் ரத்வத்தை ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது தெரிவித்தார்.

அவர் கூறியவை யாவும் உண்மையே. பிரபாகரன் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் வந்து நின்ற அதே வேளையிலேயே நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சு ஆரம்பிப்பதற்காக அடித்தளம் இடப்பட்டது - பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடவேண்டிய தேவை பிரபாகரனுக்கு இருந்தது. அப்போதுதான் பிரபாகரனால் ஸ்ரீலங்காவின் வரைபடத்தில் வடக்கு-கிழக்கு பகுதிகளை கோடிட்டு வேறுபடுத்திக் காட்டிப் பேச்சில் கலந்து கொள்ள முடியும். ஈழ இராச்சியத்தின் எல்லைகளை வகுத்திருப்பார். அவ்வாறு நிகழுமானால் பிரபாகரன் கோரும் தீர்வுயோசனைக்கு அரசு இணங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அவ்விதம் நிகழ்ந்திருப்பின் பிரபாகரன் கீறிய நாட்டு எல்லைக்கோட்டைத் தாண்டி, எவரும் காலடி எடுத்து வைத்திருக்க முடியாது. அவ்விதம் நிகழ்ந்திருந்தால் இன்று வன்னிக்குள் பிரவேசிப்பது எவ்விதம் தடை செய்யப்பட்டுள்ளதோ, அவ்விதமே யாழ்ப்பாணம் செல்வதும் தடை செய்யப்பட்டிருக்கும் அவ்விதம் நடைபெற்றிருந்தால் வடக்கில் தேர்தல் நடத்துவதற்கு இயலாது இருந்திருக்கும் 2000 மற்றும் 2001 பொதுத் தேர்தல்களின் போது வட பகுதியிலிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக்கூடத் தேர்ந்தெடுக்க இயலாது போயிருக்கும். அந்த நிலை யில் நாட்டின் இறைமைக்கு ஏற்படும் அச்சுறுத்தல் போன்றே நாட்டின் அரசுக்கும் அச்சுறுத்தலையும் குறைத்து மதிப்பிட முடியாதிருந்திருக்கும்.

இந்த நிகழ்வுகள் ஏற்படா வண்ணம் ஜெனரல் ரத்வத்தை முக்கிய பங்காற்றியுள்ளமை வெளிப்படை. சமாதானம் பற்றிய விடயத்தில் யாழ்ப்பாணம் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதும் தெளிவாகிறது. ஆனால், யாழ்ப்பாணத்தைத் தக்க வைத்தமை போன்று யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் ஜெனரல் ரத்வத்தை ஆற்றிய பங்களிப்பின் முக்கியத்துவம், உடதலவின்ன படுகொலைச் சம்பவத்தின் மூலம் மறக்கடிக்கப்பட்டுவிட்டது. இன்று பொதுமக்களின் பேச்சில் அடிபடுவது யாழ்ப்பாணம் பற்றிய விடயமல்ல. இன்று அவர்கள் உடதலவின்ன பற்றியே அதிகம் பேசிக் கொள்கின்றனர். மக்கள் இன்று மத்திய வங்கி குண்டுவெடிப்பு வழக்கில் பிரபாகரனுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதெனப் பேசிக்கொள்வதில்லை. இன்று அவர்கள் உடதலவின்ன பத்து பொது மக்கள் கொலை வழக்கில் ஜெனரல் ரத்வத்தைக்கு வழங்கப்படவுள்ள தீர்ப்புப் பற்றியே பேசிக் கொள்கின்றனர்.

உண்மையில் எவ்வாறு தீர்ப்பு அமையப்போகிறது? அதனைத் தீர்மானிப்பது நீதிமன்றமே. ஜெனரல் ரத்வத்தையின் அரசியல் வாழ்க்கையின் எதிர்காலம் எப்படி அமையும் என்பது பற்றி மட்டுமே மக்கள் தமக்குள் விவாதிக்க முடியும். ரத்வத்தை முன்னர் பல தடவைகள் மரணத்தின பிடியிலிருந்து நூலிழையில் தப்பியவர். ஒரு சமயம் அவர் பெரிய வாகன

விபத்தொன்றில் சிக்கி நூலிழையில் உயிர் தப்பிய போதும் காலொன்று முறிந்த நிலையில் நீண்டகாலம் சிகிச்சை பெறவேண்டி ஏற்பட்டது. பிறிதொரு சமயம் அவர் பயணித்த உலங்குவானூர்தி விபத்துக்குள்ளாகி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் தரையிறங்கிய வேளை அவர்களிடம் சிக்கிக் கொள்ளாது தப்பமுடிந்தது. வேறொரு சந்தர்ப்பத்தில் யுத்தம் இடம்பெற்ற பிரதேசத்தில் வாகனத்தில் பிரயாணம் செய்த வேளையில் தாக்குதல் சம்பவம் ஒன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார். அதேபோன்று அவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகக் கடமையாற்றிய காலம்முழுவதும் அவரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட பல தற்கொலைத் தாக்குதல சம்பவங்களிலும் அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இத்தடவையும் ஜெனரல் ரத்வத்தை அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துக் கொள்வாரா?

இதனைத் தீர்மானிப்பது பொது மக்களே. பொதுமக்களும் புதுமையானவர்கள். இந்தியாவிலாயின் பொது மக்கள் தலைவர்களை அதிகாரத்தில இருத்துவார்கள். அவ் அதிகாரத்தைத துஷ்பிரயோகம் செய்யும் தலைவர்களும் அமைவதுண்டு. இதனைப் பொதுமக்கள் உணரும்போது அடுத்த சந்தர்ப்பத்தில் அத் தலைவர்கள் பொது மக்களால் தூக்கி வீசப்படுவர்கள். இதன்பின் புதிதாக மக்களின் ஆணையால் ஆட்சி அதிகாரம் பெறும தலைவர்கள் பதவியை இழந்த முன்னைய தலைவர்கள் மீது குற்றஞ் சுமத்தி அவர்களைச் சிறைக்கு அனுப்புவதுண்டு. அவ்விதம் குற்றச்சாட்டின் பேரில் சிறைசென்ற தலைவர்கள் தண்டனை முடிந்து விடுதலையாகி


**தமிழில்: வியெஸ்ரி**

வரும் வேளையில் பொதுமக்கள் தாம் புதிதாகத் தேர்ந்தெடுத்த தலைவர்களைப் புறககணித்து சிறை மீண்ட பழைய தலைவர்களைத் தியாகிகளாக ஏற்றுக்கொள்வது மட்டுமன்றி அடுத்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மீண்டும் ஆட்சி அதிகாரமும் அளிக்கின்றனர். நம் நாட்டுப் பொது மக்களிடமும் இத்தன்மை இல்லையெனக் கூறமுடியாது. எமது நாட்டு அரசியல் வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால் இதனை எம்மால் புரிந்து கொள்ள இயலும். நீதிமன்றத் தீர்ப்பு எவ்விதம் அமைந்தபோதும், ரத்வத்தையிடமும் அவ்வித எதிர்பார்ப்பே காணப்படுகிறது. ரத்வத்தை அரசியல் குறித்து எதுவித கருத்தும் வெளியிடாதிருப்பதற்கான காரணம் இதுவாக இருக்கலாம்

சிறை, நீதிமன்றம் மற்றும் பொலீஸ் விசாரணை இவை யாவும் ரத்வத்தைக்குப் புதியனவல்ல. 1977 பொதுத்தேர்தல் தோல்வியின் பின்னர் சிறிமாவோவின் பிரஜா உரிமையை நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தினத்தன்று, நாடு பூராவிலும் வன்செயல்களைத் தூண்டிவிடுவதான குற்றச்சாட்டின் பேரில் அப்போது பதவி வகித்த ஐ.தே.க.அரசால் ரத்வத்தை மீது குற்றஞ் சுமத்தப்பட்டது. அதே போன்று1982 ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஒரு பிரிவினருக்கெதிராக நக்ஸலைற் குற்றச்சாட்டு ஐ.தே.க.அரசால் சுமத்தப்பட்ட வேளை ரத்வத்தையின் பெயரும் அதில் அடங்கியிருந்தது. அக் குற்றச்சாட்டுக்கள் காரணமாக ரத்வத்தை சிறைச்சாலை, நீதிமன்றம் மற்றும் பொலீஸ் நிலையம் ஆகியவற்றுக்குப் பல தடவைகள் செல்லவேண்டி ஏற்பட்டது. இப்போதும் அவ்வகையான அனுபவமே அவருக்கு ஏற்பட்டுள்ளது.

இன்று ரத்வத்தைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைக்கும் அன்றைய பொ.ஐ. முன்னணி அரசின் கீழ் சிறிசேன கூரேக்கு ஏற்பட்ட நிலைமைக்கும் இடையே அபூர்வமான ஒற்றுமை உள்ளது. அன்று சிறிசேனகூரே மீது பொ.ஐ.முன்னணி அரசு குற்றம் சுமத்திய போது அவ்வேளையில் எதிர்க்கட்சியாயிருந்த ஐ.தே.கட்சி ஒருவரின் தனிப்பட்ட தவறுகளுக்கு கட்சி

(9ஆம் பக்கம் பார்க்க)


வனிலா சுவையூட்டப்பட்டது
Action
Nutritional Food Drink
போஷாக்கு நிறைந்த பானம்
பிள்ளைகள்
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் B, மற்றும் ஏனனய அத்தியாவசிய போஷனைகள்.
வாலிபர்
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், மற்றும் ஏனனய அத்தியாவசிய போஷனைகள்.
வயது வந்தவர்கள்
புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனனய அத்தியாவசிய போஷனைகள்.
கர்ப்பிணி/பாலூட்டும் தாய்மார்கள்
சக்தி, புரதம், கல்சியம், (f)போலிக் அமிலம், விட்டமின் B12, இரும்புச்சத்து, மற்றும் ஏனனய அத்தியாவசிய போஷனைகள்.
போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.
தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்
தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்
வயோதிபர்
புரதம், விட்டமின் B, அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனனய அத்தியாவசிய போஷனைகள்.
Manufactured by :
Astron
Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 636741 Fax: 636173
E-mail: astron@astron.lk
450 கிராம் ரூ.380/=
Vanilla Flavoured
Action
Nutritional Food Drink

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாய்க்குட்டி விற்பனைக்கு

**Pedgreed Dobermann Pincher pups from Andigama Kennels** எங்கள் சொந்த நாயின் குட்டிகள் கொழும்பிலிருந்து 15-03-2003 இல் தருவிக்கப்படும். தேவையானோர் 13-03-2003இற்கு முன் பதிவு செய்யவும். அத்துடன் அழகான **Great Dane X Dobermann Pincher** குட்டிகளும் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15289)

## தவறிவிட்டது

பளை, தம்பகாமத்தைச் சேர்ந்த வயிரமுத்து கணபதிப்பிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.271642857V) தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். கே.சிவராசசுந்தரம், இல.122/12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். **T.P.No. 021-222 2324.** (15284)

## கல்வி அமைச்சர் விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

பாடசாலை கல்வி அமைச்சர் கரநிமல ராஜபக்ஷ இரண்டுநாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்.வரவுள்ளார்.

யாழ்குடாநாட்டுப் பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலகங்களை பார்வையிடும் அமைச்சர் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-8)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை வெள்ளிக்கிழமை தோறும் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லை ஆதீன ஓதுவார் சி.தில்லைமணி பண்ணிசை நிகழ்த்துவார். இதன் அறிமுக உரையை 'இசைமணி' சி.துரைராசா நிகழ்த்துவார். (ஒ-135-173)

## பத்திரிகையாளர் பயிற்சிப் பட்டறை

கொழும்புத்துறை,மார்ச்7

யாழ்.மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும் 'பாதுகாவலன்' பத்திரிகையும் இணைந்து நடத்தும் பத்திரிகையியல் பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் அகவொளி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிநெறியில் பங்குகொள்ள விரும்புவோர் பிரதான வீதியில் உள்ள பாதுகாவலன் பணிமனையில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-30)

## விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்7

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய வளாகத்தில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட மாணவியின் மரணம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள சந்தேகநபரான நிமலன் என்பவரைத் தொடர்ந்தும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இந்த உத்தரவை விடுத்துள்ளார். (ஒ-8)

## காணி விற்பனைக்கு

அளவெட்டியில் மலை வேம்படிச் சந்தை முன்பாக பிரதான வீதியில் காணி ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு:
SAMPANTHAN
MEDICAL CLINIC
22, Ramaiah Chettiar Lane,
Jaffna.
Mr.S.பாலகிருஷ்ணன் (தம்பி)
T.P.No: 01-735830
Dehewalla.
(15296)

# பணிநிலை வேண்டுகை

வன்னியில் பல கிளைகளைக் கொண்டியங்கும் முன்னணி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையும் முன்பட்டறிவுமுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலைகள்:**

பணிநிலை -
01. கணக்குப் பதிவாளர்
02. களஞ்சியக் காப்பாளர்
03. எழுதுநர்கள்
04. உணவு பரிமாறுபவர்
05. பாதுகாப்புப் பணியாளர்
06. சமையலாளர்
07. விற்பனையாளர்
(Hardware, Building Materials, Spair parts)

**கல்வித் தகைமை:**

1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:
க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் தேர்ச்சியும், மேற்பட்ட கல்வித் தகைமைகளும்.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
10ஆம் வகுப்பில் கற்றிருத்தல் வேண்டும்.

6ஆம் பணிநிலைக்கு:
ஹோட்டல் முகாமைத்துவம் கற்கை நெறியில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
8ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்திருத்தல்.

**அகவையெல்லை** : 18 - 50

**பால்:** : ஆண்கள் மட்டும்

**பட்டறிவு** : 1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு குறித்த பணியில் ஓர் ஆண்டுக்கு குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
குறித்த பணியில் நன்மதிப்புள்ள நிறுவனமொன்றில் இரண்டாண்டு பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6ஆம் பணிநிலைக்கு:
மேனாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

7ஆம் பணிநிலைக்கு:
இரும்பகம், கட்டடப் பொருள், வாகன உதிரிகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

***நிறுவனம் வழங்கும் சிறப்புச் சலுகை***

☆ உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
☆ தொலைவிடங்களிலிருந்து வரும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்படும்.

வேண்டுகைகள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதி, 15.03.2003ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல.: 1812**
**மே/பா. உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(C726801)

உ

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

அன்புடையீர்!

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 18.03.2003 செவ்வாய் காலை 10.00 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர்கள் (அங்கத்தவர்கள்) அனைவரும் தவறாது வருகை தந்து பூரண ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. சென்ற பொதுக் கூட்ட அறிக்கை
4. வருடாந்த செயற்பாட்டறிக்கை
5. பொருளாளர் வருடாந்த அறிக்கை
6. புதிய அலுவலர் தெரிவு
7. பிரேரணைகள்
8. சபையோர் குறிப்புரை
9. கல்லூரிக் கீதம்

☆ பிரேரணைகள் **15** ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்க வேண்டும்.

தவறாது சமுகம் தருக!

தலைவர்
அ.சிறிக்குமரன் (அதிபர்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

வை.யோகேஸ்வரன்
பொதுச் செயலாளர்
யா.இ.க.பா.அ.சங்கம்

(C726806)

# IIS இன் விசேட கற்கை நெறிகள் ஆரம்பம்

09-03-2003 ஞாயிறு காலை 10.00 மணி

சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட
கலைமாணிப் பட்டப்படிப்பு
கணக்கியல் கற்கை நெறி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
**TATA** நிறுவனத்தின் சான்றிதழ்

NEXT EX GENERATION

ARE YOU PLANNING TO STUDY IN ABROAD!
ARE YOU WILLING TO GET EMPLOYMENT ABROAD!
ARE YOU ANXIOUS TO GET FOREIGN SCHOLARSHIP AND TRAINING!

# IELTS

International English Language Testing System Opens the way Examination is held by British Council Colombo. Certificate is Issued by the University of Cambridge, London.

**INSTITUTE OF INFORMATICS STUDIES**


# உங்களுடைய சமையலறைத் தேவைகளை பூர்த்தி செய்யும் உலகப் புகழ்பெற்ற தயாரிப்புக்கள்



National

MULTI NATIONAL

KANCHAN

New Sumeet®

PREETT

மிக்ஷர் கிறைண்டர் வகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

**JAFFNA ELECTRICALS**

141, POWER HOUSE ROAD, JAFFNA ***TEL: 021-222-5766***

(C-26637)



# யாழ் நகரில் IBM கணனிகள் விற்பனை / பராமரித்தல் / பழுதுபார்த்தல்



யாழ் நகரில் IBM கணனிகளுக்கு விற்பனை/பராமரிப்பு/பழுதுபார்த்தல் சேவைக்காக அதிகாரமளிக்கப்பட்ட (Authorised) நிறுவனம் MICRO PC SYSTEMS என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

● **Pentium 4 Personal Computers** ● **Laptop / Think Pads** ● **Servers**

குறிப்பு : தற்பொழுது IBM கணனிகளை யாழ் நகரில் பாவனை செய்பவர்கள் இலங்கையில் எவரிடம் கொள்வனவு செய்திருந்தாலும் MICRO PC SYSTEMSல் பதிவு செய்வதன் மூலம் இலவசமாக 3 வருட உத்தரவாதத்தை (Parts Replacement for 3 years) யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



IBM கணனியில்
● உதிரிப்பாகங்கள் 100% பரீட்சிக்கப்பட்டவை (100% Tested)
● 3 வருடங்கள் உதிரிப்பாகங்களுக்கு உத்தரவாதம் (3 Years Warranty for Parts)
● 3 வருட பராமரிப்பு சேவை யாழ் நகரிலேயே வழங்கப்படும் (3 Years Service)

**MICRO PC SYSTEMS**

தலைமை காரியாலயம் வெள்ளவத்தை 15, 36th Lane, Col- 6. : 074-516764, 074-513235
கிளை யாழ்ப்பாணம் 175/3, Kasthuriyar Rd, Jaffna. Tel : 0777-308417

# கட்டடப் பொருள்களின் ஏற்றுமதியில் மெட்ரோ ரூ:.ப்

## வடக்கில் விற்பனை விஸ்தரிப்புக்கு சத்தியேந்திரா திட்டம்

*கேள்வி:-* இந்த தொழிற்றுறையில் இதுவரை கடந்துவந்த பாதையைப் பற்றி கூறமுடியுமா?

*பதில்:-* 1989இல் எனது தொழிலை ஆரம்பித்தேன். கட்டடத்துறையில் உள்ள சில சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முயற்சியிலே நான் முதலில் ஈடுபட ஆரம்பித்தேன். தம்மிடமுள்ள பணத்திற்குத் தேவையான காலப் பகுதிக்குள் தமது வேலையை எவ்வாறு முடித்துக்கொள்வது என்பதில் பலருக்கு சிக்கல் உள்ளது. இதனால், கட்டடம் கட்டும்போது முதலில் அதற்குச் செலவிடப்படவேண்டிய பணம், காலம் தொடர்பான வழி காட்டலை நாம் ஏற்படுத்திக்கொடுக்கிறோம்.

அதேவேளை, 'அஸ்பஸ்டஸ்' கூரைத் தகடுகளுக்குப் பதிலாக அலுமினியம் கலந்த தகடு வகையை அறிமுகப்படுத்தினோம். எமது நாட்டின் காலநிலைக்கு ஏற்றவையாக இவை காணப்படுகின்றன.

வர்த்தக நடவடிக்கைகள் அனைத்திலும் செலான் வங்கியும் காப்புறுதியும் பல தரப்பட்ட தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. எனது வர்த்தகம் இன்று கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

*கேள்வி:-* நீங்கள் கொள்ளுப்பிட்டி செலான் வங்கியின் முதலாவது வாடிக்கையாளர். அது மட்டுமல்ல மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் போது செலிங்கோ கட்டடம் சேதமுற்றபோது உடனடியாக வந்து உதவினீர்கள். அதற்காக எந்த ஒரு கைமாற்றையும் எதிர்பார்க்கவில்லை. அதற்காக நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*பதில்:-* உங்களுக்கு உதவியதில் நான் சந்தோஷப்படுகிறேன்.

*கேள்வி:-* உங்களது சொந்த இடம் யாழ்ப்பாணம், தற்போது கொழும்பு வந்து பல துறைகளிலும் வியாபாரத்தையும் விஸ்தரித்துள்ளீர்கள். இதில் நீங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் எவை?

*பதில்:-* நான் ஒரு பொறியியலாளர். அதேபோல வர்த்தகரும்கூட. எனது தொழிலில் பல பிரச்சினைகள் எழுந்தன. ஆனால், அவற்றை அப்படியே விட்டுவிடவில்லை. தீர்வுகளைத் தேடினோம். கட்டடத்துறைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதில் நாம் இலங்கையில் முதன்மை வகிக்கிறோம். எமது பொருள்களை பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். இந்தியா விற்கும் சில பொருள்களை ஏற்றுமதி செய்யவிருக்கின்றோம். அதேபோல எம்மிடமுள்ள பொறியியலாளர்கள் அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்றனர்.

*கேள்வி:-* இந்திய உற்பத்திகளுடன் போட்டியிடுவதாயின் உங்கள் பொருள்களின் தரம் உயர்வாக இருக்கும் என் நினைக்கிறேன்.

*பதில்:-* ஆம். நாம் சாதனையாளர்கள்.

*கேள்வி:-* மூலதனம் தொடர்பாக நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

*பதில்:-* எம்மீது விதிக்கப்படும் வரிமுறைகளில் தளர்வு ஏற்படுத்தப்படவேண்டும். வெளிநாடுகளில் முதலீட்டாளர்களுக்கு வட்டியில்லாக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வாறான விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியம். அதேபோல தேசிய தீர்வை வரிப் பாதுகாப்புமூலம் உள்நாட்டு முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

*கேள்வி:-* இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினீர்களா?

*பதில்:-* ஆம். கட்டட நிர்மாண சங்கத்துடனும் இதுபற்றிப் பேசியுள்ளோம். குறிப்பாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான தீர்வை வரி பாதுகாப்புப் பற்றி ஆராய்ந்தோம்.

*கேள்வி:-* உங்கள் சொந்த ஊரான யாழ்ப்பாணத்தில் யுத்தம் ஓய்ந்து சுமுகமான நிலை திரும்பிக்கொண்டிருக்கிறது. அப்பகுதியில் நீங்கள் திட்டமிட்டிருக்கும் நிர்மாணப்பணிகள் எவை?

*பதில்:-* அதற்கான எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. ஆனால், தெற்கைப்போல அல்ல. வடக்கு அது மாறுபட்ட ஒரு பிரதேசம். மண், சிமெந்து போன்ற பொருள்களைப் பெறுவதில் சிக்கல்கள் உள்ளன. எனவே, அனைத்து விடயங்கள் குறித்தும் ஏற்பாடுகளைச் செய்த பின்பே பணிகளை ஆரம்பிக்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் தொழிலதிபர் சத்தியேந்திரா.



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் வி.சத்தியேந்திராவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்னம்.

### வர்த்தக ஸ்பெஷல்

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 04 ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் தொழில் அதிபர் வி.சத்தியேந்திரா.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வி.சத்தியேந்திரா இன்று கொழும்பில் பல துறைகளில் கால் பதித்துள்ளார்.

'அஸ்பஸ்டாஸ்' கூரைத்தகடுகளுக்கான இவரது மெட்ரோ ரூ:.ப் நிறுவனம் பதிலீட்டு கூரைத் தகடுகளைத் தயாரிக்கின்றது. இதுதவிர கட்டட நிர்மாணப் பொருள்கள், குளிருட்டிகள் என பலதரப்பட்ட உற்பத்திகளில் இவர் ஈடுபட்டுள்ளார்.

தனது கட்டட நிர்மாணப் பணிகளை வடக்கிற்கும் விஸ்தரிக்க விரும்புகிறார் தொழிலதிபர் சத்தியேந்திரா.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் வி.சத்தியேந்திராவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

---

## பத்திரிகையாளர் கௌரவிப்பு

வலிகாமம் தெற்கு,மார்ச்7

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினரால் மூத்த பத்திரிகையாளரைக் கௌரவிக்கும் நிகழ்வும், "யாழ்ப்பாணன்" செய்தித்தாள் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சிகதிர்காமத்தம்பி, சங்கத்தின் போஷகர் இராசையா விமலன் கார்த்திகேயன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவர்.

வடக்கு - கிழக்கு மாகாண ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவிச் செயற்றிட்ட முகாமையாளர் இவர்களுக்கு பொன்னாடைபோர்த்துவார்.

அன்றைய தினம் சங்கத்தினரால் "யாழ்ப்பாணன்" என்னும் புதிய செய்தித்தாளும் வெளியிடப்படவுள்ளது. (ஒ-152)

## தமிழ்க் கைதிகளுக்கு பொது மன்னிப்பு குறித்து ஜனாதிபதி பரிசீலிப்பாராம்!

### அவரைச் சந்தித்துப் பேசிய மலையக எம்.பி.சதாசிவம் கூறுகிறார்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்தப்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இக்கைதிகள் தொடர்பாக பொ.ஐ.மு.நுவரெலியா மாவட்ட எம்.பி. எஸ்.சதாசிவம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இச்சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்தார் என்று சதாசிவம் எம்.பி. நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை களுத்துறை சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் 41 கைதிகளில் சிலர் உண்ணாவிரதத்தை நேற்றுமுன்தினம் கைவிட்டனர் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் ஷெல்டன் பொத்தேஜ் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதால் மட்டுமே விடுவிக்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

### யாழ்.நகர வங்கியொன்றில்

## படிவத்தை பூர்த்திசெய்த போது பெண்ணிடம் கைப்பை அபகரிப்பு

கொழும்புத்துறை,மார்ச்7

யாழ்.நகரிலுள்ள வங்கியொன்றில் தான் அடைவு வைத்த நகையை கடந்த செவ்வாயன்று மீளப்பெற வந்த பெண்மணி ஒருவரிடம் நகையும், பணமும் அபகரிக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது.

கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த இப்பெண்மணி அடைவு நகைகளை மீளப்பெறுவதற்காக வங்கிக்கு வந்தார். அவரது கைப்பைக்குள் வேறு நகையும், 11ஆயிரம ரூபாவுக்கு மேல் ரொக்கப்பணமும் இருந்ததாகவும் -

கைப்பையை அருகே வைத்துவிட்டு, அடைவு மீள்வதற்குரிய படிவங்களை அவர் பூர்த்திசெய்துவிட்டு பார்த்த போது கைப்பையை காணவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-30)

### புங்குடுதீவில் ஆத்திசூடி முற்றோதல்

ஔவைப் பிராட்டி அருளிச்செய்த ஆத்திசூடி முற்றோதல் விழா இன்று வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதியில் நடைபெறவுள்ளது.

வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும் முன்னாள் அறங்காவலர் தொண்டருமான அமரர் க.திருநாவுக்கரசுவின் 65ஆவது ஜயந்திதின ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் நினைவுப் பேருரைகள், சேவைநலன்பாராட்டுக்கள், திருமணப் பதிவு எனப் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், ஆத்திசூடி, திருக்குறள், கொன்றைவேந்தன், போன்ற முற்றோதல்கள் பரிசுகள் மற்றும் பட்டயம் வழங்குதல் போன்றவையும் இடம் பெறும். நிகழ்வுகள் தினமும் காலை 9மணிமுதல் மாலை 5.30 மணிவரை இடம்பெறும். (எ-9)

### தமிழரை.......

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பேற்க முடியாதெனக் கூறி மௌனம் சாதித்தது. இதனால் வெறுப்புற்ற சிறிசேனகூரே கட்சிக்கும் தலைமைத்துவத்துக்கும் எதிராகக் கருத்துத் தெரிவித்தார். அவர் ஐதேக்கட்சியையும் அதன் தலைமைத்துவத்தையும் பழி தீர்க்கும் நோக்கில தம் மீது குற்றம் சுமத்திய பொ.ஐ. முன்னணி அரசுடன் இணைந்து ஐ.தே.கட்சியை பிளவுபடச் செய்து தலைமைத்துவத்தில் மாற்றம் உண்டாக்க முயன்றார். ஆனால், இறுதியில் சிறிசேனகூரே அரசியலில் இருந்து காணாமல் போக நேர்ந்தது. நாளை ரத்வத்தையும் இவ்வாறான சவாலை' எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கூரே சென்ற பாதையில் தானும் பயணிக்க முயன்றால் கூரேக்கு நேர்ந்த கதியே ரத்வத்தைக்கும் ஏற்படும். அவ்வாறு நிகழுமாயின் உரோம வரலாற்றின் வீரகாவியத்துக்கு மீண்டும் உயிரூட்ட எண்ணியிருக்கும் சிறிலங்காவின் ஜெனரலின் கதை சோகமான முடிவாக அமையும்.◆

## இறைவன் விரும்பும் நோன்பு

"பசித்தோருக்கு உங்கள் உணவைக் கொடுப்பதும், தங்க இடமில்லாத வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் அன்றோ இறைவன் விரும்பும் நோன்பு"

ஒவ்வொரு வருடமும் தவக்காலம் வருகின்றது. பேசுகிறீஸ்து பாடுபட்டு

### தவக்காலச் சிந்தனை -மூன்றாம் நாள்-

சிலுவையில் அறையப்பட்டு இறக்கின்றார். ஆனால், இதன் வழியாக எம்மில் நிகழ்வதுதான் என்ன? தவக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் நோன்பிருக்கின்றோம். ஆனால், இதனால் விளைவதுதான் என்ன? எம்மை நாமே கேட்டுப் பார்த்தால் விடை கிடைக்காமலேயே இருக்கும்.

ஏனென்றால், இவற்றை நாம் எமது கடமையாக மட்டுமே கடைப்பிடிக்கின்றோம். உண்மையாக உள்ளத்தால் உணர்ந்து கடைப்பிடிப்பதில்லை. எம்மைப் பொறுத்தவரை தவக்காலத்தில் எம்மை ஒறுத்து நோன்பிருக்க வேண்டும் என எண்ணுகின்றோம். ஆனால், அவ்வாறு நோன்பிருந்தால் மட்டும் போதுமானதா? நோன்பு என்பது எதற்காக? நோன்பின் பின் விளையப்போவது தான் என்ன? என்பவற்றை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எமது சமூகத்தில் உணவினை ஒறுத்தல் மட்டும் நோன்பிருத்தல் என்ற அர்த்தம் வளர்ந்து வந்துள்ளது. அதுவல்ல உண்மையான நோன்பு. எமது விருப்பு வெறுப்புகளை விடுத்து, மௌன விரதம் பூண்டு, மனத்திலுள்ள தவறான நாட்டங்களைப் பரிசோதித்து அவற்றைக் களைய வழி தேடி, ஏழைகள் மீது இரக்கம் காட்டப் பயிற்சி பெற்று, இறைவனின் விருப்பத்தைத் தேர்ந்து தெளிந்து அதன்படி நடப்பதே நோன்பின் குறிக்கோள்.

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வது உண்மையான நோன்பு. சமுதாயத்தின் அடித்தளத்தில் உரிமை இழந்து வாழ்வோருக்காய் போர்க்கொடி தூக்குவது உண்மையான நோன்பு. மேலும் உடற்தேவைக்கு மேற்பட்ட உணவைக் கட்டுப்படுத்தல், உடல் உறுப்புகளை உள்ளத்தின் உறுப்புகளை தன் இச்சைப்படி நடக்கவிடாது தடுத்தல், தேவைக்கு மேற்பட்டிருப்பதை அல்லது தேவையானதையும் கூட பிறருக்கு பகிர்ந்துகொள்ளல் என்பன நோன்பின் செயற்பாடுகளாகும். இந்நோன்பு தவக்காலத்தில் மட்டும் கடைப்பிடிக்கும் ஒன்றல்ல. மாறாக நாம் இறைவனைத் தியானிக்க எந்நேரமும் நோன்பிருக்க வேண்டும். உணவினை ஒறுத்தல் மட்டும் நோன்பாகிவிடாது. நோன்பின்போது எமது எண்ணங்கள் அனைத்தும் இறைவனைத் தியானிப்பவையாக இருத்தல்வேண்டும்.

**லூ.மேரி**

மேலும், இறைவன் எமக்கு அளித்த சகல நன்மைத் தனத்திற்காகவும், உணவிற்காகவும் நன்றி கூறி நோன்பிருக்கும் காலத்தில நாம் ஒறுத்துக்கொண்ட உணவினை பசித்தோர்க்கு அளிப்பதும், இடமற்றோருக்கு இருப்பிடம் கொடுத்தலும் உடையற்றோருக்கு உடுக்கக் கொடுப்பதுமே எமது நோன்பின் உண்மையான அர்த்தமாகும். எனவே, எமது நோன்பின் முழுப்பலனை நாம் அடைய உண்மையான உள்ளத்துடன் நோன்பு இருந்து நாம் ஒறுத்துக்கொண்டவற்றைப் பிறருக்கும் பகிர்ந்தளிப்போம். ☆

# பழிதீர்க்கும் படலம்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டும். இல்லையேல் அரையிறுதி வெறும் கனவாகும். எந்த ஒரு அணியையும் அவர்கள் இலகுவில் வென்றுவிட முடியும் என்று கருதிவிடமுடியாது.

அவர்களுக்கு முதல் பலப்பரீட்சையே அஸ்திரேலியர்களுடன். செய் அல்லது செத்துமடி என்பதே அவர்களுக்கு இருக்கும் ஒரே வழி. இலங்கையுடன் கணக்குத் தீர்ப்பதற்கு ஆஸ்திரேலியர்களுக்கு நிறையவே இருக்கின்றன. 1996இல் அவர்களிடம் இருந்து உலகக் கிண்ணத்தைப் பறித்தவர்கள். கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த ஐ.சி.சி கிண்ணத்தில், தோல்வியைப் பரிசாகத் தந்தவர்கள். அனைத்துக்கும் இன்று கணக்குத் தீர்த்தாக வேண்டும். இம்முறை தீர்ப்பது சுலபம்; தீர்க்க முடியும் என்றே ஆஸி.அணி எண்ணுகிறது.

இலங்கையின் சுழல்பந்துவீச்சாளர்களே அவர்களின் சத்துருக்கள். சனத் ஜயசூரியாவின் துருப்புச் சீட்டுக்களும் அவர்கள் தான். ஆனால் ஆட்டம் நடக்கும் செஞ்சூரியன் மைதானம் வேகப் பந்துவீச்சுக்கே சாதகமானது என்று கூறப்படுகின்றது. இலங்கையர்களுக்கு சத்துருக்கள் ஆஸ்திரேலிய வேகப் புயல்கள். சீறிவரும் மெக்ராத்தின் பந்துகள் இலங்கைத் துடுப்பாளர்களுக்கு சிம்பசொப்பனம்.

ஆனாலும், வி.பி. கிண்ணத் தொடரின் ஒரு ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை அபாரமாக வென்றது இலங்கை. ஒரு வருடத்தின் முன்னர் ஐ.சி.சி கிண்ணப் போட்டியிலும் அவர்களை வென்றுள்ளார்கள். ஆரம்பத் துடுப்பாளர்கள் ஜயசூரியாவும் அத்தப்பத்துவும் முழுத்திறனுடன் இருக்கிறார்கள். மேற்கிந்தியாவுடனான ஆட்டத்தில் கைகொடுத்த நடுவரிசை துடுப்பாளர்கள். ஆரம்பம் முதல் உலகக் கிண்ண ஆட்டத்தில் ஆக்கிரமிப்புச் செலுத்தும் வேகப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் மற்றும் சுழல் பந்துவீச்சாளர் முரளி என்று இலங்கை அணி இப்போது நல்ல திறனிலேயே இருக்கின்றது.

ஆஸ்திரேலியா அதனிலும் திறனாக இருக்கின்றது. இதுவரை ஆடிய உலகக் கிண்ண ஆட்டங்கள் அனைத்திலும் அது வென்றுள்ளது. முழு அணியும் தன் உச்சத் திறனை வெளிப்படுத்தி நிற்கும் சமயம் இது. துடுப்பாளர்களும் பந்துவீச்சாளர்களும் தத்தம் பணிகளை செவ்வனே, மிகச் சிறப்பாகச் செய்கிறார்கள். ஒவ்வொரு ஆட்டத்திலும் யாராவது ஒரு துடுப்பாளர் அணிக்குக் கைகொடுக்கிறார். எவராவது ஒரு பந்துவீச்சாளர் எதிரணியைத் துவம்சம் செய்கிறார். மிகச சிறப்பான களத்தடுப்பு. ஆஸ்திரேலியாவும் உச்சத் திறனில்தான் இருக்கிறது.

இலங்கைக்கு சவால்தான். கென்யாவுடனான தோல்வியில் அவர்கள் படித்த பாடம்தான் அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டும். அணியின் ஒருங்கிணைந்த திறன் இன்று வெளிபட்டால் ஒழிய வெற்றி சந்தேகத்துக்கிடமானது.

இதுவரை நடந்த ஆட்டங்களில் ஆஸ்திரேலியாவுக்கு இங்கிலாந்து அணி மட்டுமே சவாலாக விளங்கியது. அதனுடனான ஆட்டத்தில் மட்டுமே ஆஸ்திரேலியா இறுதிவரை பிரயத்தனப்பட்டுப் போராட வேண்டியேற்பட்டது. இலங்கையுடனும் அத்தகைய ஒரு நிலையை எதிர்கொள்ள அது தயாராகவே இருக்கும்.

இலங்கையைப் பழிவாங்க 1999 இல் அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போது அந்த அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே அவர்கள் கூடிய கவனத்தை இந்த ஆட்டத்தில் செலுத்துவார்கள். ஒரு நாள் ஆட்டங்களில் தொடர்ந்து 12 வெற்றிகளைப் பெற்ற சாதனையை மேலும் அதிகரிக்க அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களின் ஆசைக்கு அணைபோட வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு இருக்கிறது. செய்வார்களா?

இதுவரை ஆஸ்திரேலியா - இலங்கை அணிகள் 48 ஒருநாள் ஆட்டங்களில் மோதியுள்ளன. அவற்றில் 31 ஆட்டங்களில் ஆஸ்திரேலியாவும் 15 ஆட்டங்களில் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன. 2 ஆட்டங்கள் முடிவுகளின்றி முடிவடைந்தன. இறுதியாக நடைபெற்ற 6 ஆட்டங்களில் ஆஸ்திரேலியா நான்கிலும், இலங்கை இரண்டிலும் வென்றுள்ளன.

பொது மைதானங்களில் நடைபெற்ற 5 ஆட்டங்களில் நான்கில் ஆஸ்திரேலியா வென்றுள்ளது. இலங்கை ஒரு ஆட்டத்தில் மட்டுமே வென்றுள்ளது.

மற்றொரு அரையிறுதி ஆட்டம் கென்யா - இந்திய அணிகள் இடையே நடக்கிறது. இலகுவாக வெல்லலாம் என்பது இந்தியர்களின் நினைப்பு. இதற்கு முன் தென்னாபிரிக்காவில் நடந்த இந்திய - தென்னாபிரிக்க - கென்ய முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் இந்தியாவை வென்றது போன்று இன்றும் வென்றுவிடமாட்டோமா என்பது கென்யாவின் அங்கலாய்ப்பு. இந்தியாவுக்கு இருக்கும் ஒரே பயம் அவர்களின் தீவிர ரசிகர்கள். தொடர் வெற்றிகளால் இப்போது மாலை போட்டு மேளம் தட்டிக் கொண்டாடுபவர்கள் தோற்றுவிட்டால் பாடை கட்டவும் தயங்க மாட்டார்கள் என்பது இந்திய வீரர்களுக்கு தெளிவாகவே புரிய வைக்கப்பட்டுவிட்டது. எந்த ஆட்டத்தையும் அவர்கள் இலகுவாக எடுத்துக் கொள்ளமுடியாது.

அரையிறுதிக்குச் செல்ல இந்தியாவுக்கு இருக்கும் இலகுவான சந்தர்ப்பமும் இதுதான். அடுத்து வரும் இரு ஆட்டங்களும் சவாலானவை. கென்யாவை வென்றுவிட்டால் அரையிறுதி ஆட்டத்துக்கு செல்லும் வாய்ப்பு மேலும் பிரகாசமாகும். கென்யாவுக்கு சிம்பாப்வேயுடனான ஆட்டம் ஒரு வாய்ப்பு. அவர்களை வென்றுவிட்டால் அரையிறுதிக்குள் நுழைவது கென்யாவுக்கு சுலபம். ஆனாலும், அவர்கள் இந்தியாவுடனும் மோதிப் பார்க்கத் தயங்கப் போவதில்லை. இந்தியப் பீரங்கிகள் முழங்கினால் கென்யா பாடு திண்டாட்டம்தான். ஓபுயா இலங்கையுடன் செய்தது போன்று அற்புதங்கள் ஏதாவது நிகழ்தினால் - இந்தியப் பீரங்கிகளை தகர்த்தால் - வெற்றியின் பக்கம் எட்டிப் பார்கக்கூடும்.

எதுவும் நடக்கக்கூடும் கிரிக்கெட்டில். அது மட்டுமே இப்போது நிதர்சனமானது.

- PTP

## சச்சின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மார்வன் அத்தபத்து, பிரைன் லாரா ஆகியோர் 249, 248 ஓட்டங்களைப் பெற்று 4ஆம், 5ஆம் இடங்களிலும் உள்ளனர்.

இவர்களில் கிப்ஸ், லாரா ஆகியோர் அடுத்த சுற்று ஆட்டங்களில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் 6 ஆட்டங்களில் விளையாடிய சமிந்தவாஸ் 158 ஓட்டங்களுக்கு 16 விக்கெட்டுக்களை வீழ்த்தி முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். மேற்கிந்திய வீரர் ட்ராக்கஸ் 208 ஓட்டங்களுக்கு 16 விக்கெட்டுக்களை கைப்பற்றி இரண்டாம் இடத்தில் உள்ளார்.

இவர்களுக்கு அடுத்தபடியாக மூன்று ஆட்டங்களில் பங்குபற்றிய அன்ரூ பிக்சல் 33 ஓட்டங்களுக்கு 12 விக்கெட்டுக்களை வீழ்த்தி மூன்றாம் இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் கிளென் மெக்ராத், பாகிஸ்தான் வீரர் வஸிம் அக்ரம் மற்றும் இலங்கை அணியின் முத்தையா முரளிதரன் ஆகியோர் தலா 12 விக்கெட்டுகளையும் வீழ்த்தி அடுத்த அடுத்த நிலைகளில் உள்ளனர். (ம-5)

## போட்டியிலிருந்து...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வோர்ன் ஊக்கமருந்து குற்றச்சாட்டின் காரணமாக தொடரிலிருந்து விலக்கப்பட்டார். அதன்பின் ஆஸ்திரேலிய அணிக்கு ஏற்பட்ட இரண்டாவது பின்னடைவு கிலெஸ்பியின் விலகலாகும்.

27 வயதான கிலெஸ்பி, இந்திய அணியுடனான ஆட்டத்தில் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தொடரில் மொத்தமாக 4 ஆட்டங்களில் பங்குபற்றி 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (ம)

# பாக் வீரர்கள்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பத்திரிகைகள் சாடியுள்ளன.

குறிப்பாக அணியின் மூத்த வீரர் வஸிம் அக்ரம் தலைமையில் ஒரு குழுவும், வக்கார் யூனிஸ் தலைமையில் இன்னொரு குழுவுமாக இயங்கி வந்ததை பத்திரிகைகள் புடம்போட்டுக் காட்டியுள்ளன.

நேற்றுமுன்தினம் ஸிம்பாப்வேயில் இருந்து தென்னாபிரிக்காவிற்கு வந்த பாகிஸ்தான் அணியினரில் வஸிம் அக்ரம், வக்கார் யூனிஸ், சிரேஷ்ட வீரர்களான சயீட் அன்வர், இன்ஸமாம் உல்-ஹக் ஆகியோர் தோல்விகளுக்குப் பொறுப்பேற்று அணியிலிருந்தும், கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறப்போவதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இவர்களில் வஸிம் அக்ரம், சயீட் அன்வர் ஆகியோர் இந்த உலகக் கிண்ணத்துடன் ஓய்வுபெறப் போவதாக முன்னரே அறிவித்திருந்தனர்.

உலகக் கிண்ணத் தொடரின் 6 ஆட்டங்களில் விளையாடி ஒரு ஆட்டத்திலும் ஒற்றை இலக்கத்தைத் தாண்டாத இன்ஸமாம் உல் - ஹக் நேற்று முன்தினம் திடீரெனத் தான் ஓய்வு பெறப்போவதாக அறிவித்தமை பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. அதேபோல, அணித்தலைவர் வக்காரும் இந்த முடிவை அறிவிப்பார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அணியின் முன்னணி வீரர்களான ரஷீத் லத்தீப், சக்லைன் முஸ்டாக் ஆகியோரும் ஓய்வுபெறும் எண்ணத்தில் உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அணியினர் பாகிஸ்தான் போய்ச் சேர்ந்ததும் குறைந்தது 7 வீரர்கள் ஓய்வுபெறுவார்கள் என்று பாக். கிரிக்கெட் அணியின் நிர்வாகி ஒருவர் தென்னாபிரிக்காவில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

"நான் ஓய்வுபெறும் வேளை நெருங்கிவிட்டது. நாடு திரும்பியதும் அது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிடுவேன்" - என்று வேகப்பந்து வீச்சாளர் வஸிம் அக்ரம் தெரிவித்தார்.

"இந்த உலகக் கிண்ணத் தொடரில் அரை இறுதி வரை எமது அணி முன்னேறும் என எதிர்பார்த்தேன். எதுவும் எமக்குச் சாதகமாக அமையாதது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. இந்தியாவுடன் நடைபெற்ற ஆட்டத்தில் எமது அணி மோசமாக தோல்வி அடைந்தது. அப்போட்டியில் விக்கெட் எதனையும் வீழ்த்தாதது மக்களை ஏமாற்றிவிட்டேனே என்று எண்ணத் தோன்றுகின்றது" - என அவர் மேலும சொன்னார்.

சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் 500 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தி சாதனை புரிந்தவர் அக்ரம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# எச்சரிக்கையுடன்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னால் மந்தமாக இருக்க வேண்டாம் என்றும் இனி எதிர்கொள்ளப்போகும் ஒவ்வொரு அணியையும் எச்சரிக்கையுடன் எதிர்கொள்ளவேண்டும் என்றும் நான் ஆஸி. அணியின் வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன்" - என்று ரிக்கி பொன்ரிங் செய்தியாளர்களிடம் கூறினார்.

தென்னாபிரிக்கா அணி சுப்பர் சிக்ஸ்"க்கு தகுதிபெற இயலாமல் போனமை குறித்து வருத்தம் தெரிவித்த பொன்ரிங், இரண்டாம் முறையாக மழையினால் பாதிப்படைந்து தென்னாபிரிக்கா அணி வெளியேற நேர்ந்தது துரதிர்ஷ்டவசமானது என்றும் -

தென்னாபிரிக்கா அணி 'சுப்பர் சிக்ஸ்' சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்தால், ஆஸி. அணிக்கு கடுமையான போராட்டம்தான் என்றும் - அவர் கருத்துத் தெரிவித்தார். (ம-5)

## கிரிக்கெட்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாகிஸ்தான் அணிக்கு ஏற்பட்ட படுதோல்வி குறித்து வெட்கமடைகின்றோம். தோல்வியால் நாங்கள் மனம் நொந்துள்ளோம்.

ரசிகர்களின் எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்றத் தவறிவிட்டோம். வெற்றி பெறுவதற்காகக் கடுமையாக உழைத்தோம். ஆனால் பலன் கிடைக்காமல் போய்விட்டது. எங்கள் தோல்விக்கு சமாதானம் கூற விரும்பவில்லை.

உலகத் தரம்வாய்ந்த பாகிஸ்தான் அணியிடம் மிகுந்த எதிர்பார்ப்பு இருந்தது உண்மை. அணியின் வீரர்கள் அனைவரும் தங்களது முழுத்திறனை வெளிப்படுத்தத் தவறிவிட்டனர்.

எங்களது அணியினர் மீண்டும் புத்துணர்ச்சி பெறுவது உறுதி. உலகத் தரம்வாய்ந்த கிரிக்கெட் அணியாக பாகிஸ்தான் திகழும் என்பதில் ஐயமில்லை - இவ்வாறு அந்த அறிகையில் கூறப்பட்டுள்ளது. (ம-5)

## இந்தியா...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னால் நாணயச் சுழற்சியே போட்டியின் முடிவைத் தீர்மானித்துவிடும் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. பாகிஸ்தான் அணித் தலைவர் வக்கார் யூனிஸ்"ம் ஏற்கனவே இவ்வாறான கருத்தை வெளியிட்டிருந்தார்.

தற்போது இந்தியாவும் இப்போட்டியை மாற்றுமாறு கோரியுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான இயக்குநர் அலி பக்கர் கருத்துத் தெரிவிக்கையில், இம் மாற்றத்திற்கு போட்டி ஏற்பாட்டாளர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும் - என்றார்.

"அரையிறுதி போட்டிகளுக்காக ஆயிரக்கணக்கானோர் தென்னாபிரிக்காவுக்கு வரவுள்ளனர். அவர்கள் ஏற்கனவே தமது விமானப் பயணப் பதிவுகளைச் செய்திருப்பர். உலகம் முழுவதிலுமுள்ள ஒலி, ஒளி பரப்பாளர்களும் இதை ஆதரிக்கமாட்டார்கள். அவர்கள் ஏற்கனவே தமது நிகழ்ச்சி நிரலைத் தயாரித்திருப்பர் - இவ்வாறு அலிபக்கர் கூறினார். (ம)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13 - 04 - 1940



மறைவு
19 - 02 - 1999

### அமரர் கனகரட்ணம் முருகேசு

*(ஸ்தாபகர் அம்பாள் பார்மஸி, சாவகச்சேரி மற்றும் நியூ அம்பாள் ஸ்ரோர்ஸ் - மதவாச்சி)*

திதி : சதுர்த்தி (07.03.2003)

**அன்பு என்னும் நீர் ஊற்றி**
**அரவணைத்த எம் தந்தையே!**
**ஆறாதையா உங்கள் பிரிவு**
**இங்கிருந்து வேண்டுகின்றோம்**
**நின் ஆத்மசாந்திக்காய்!**

*சிறி அம்பாள் பார்மஸி அன்ட் குறோசறி,*
*222/2 பிரதான வீதி, மானிப்பாய்.*

தங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்

(சி-26832)



**Reynolds** **விற்பனை பிரதிநிதி தேவை**

எழுதுகருவிகளின் முன்னணி நிறுவனமான பிரான்ஸ் சன்வூட் நிறுவனத்தின் உற்பத்திகளை விற்கும் எமது நிறுவனத்தின், விற்பனையை விருத்திசெய்வதற்கு யாழ்.குடாநாட்டிற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

ஆர்வமுடையோர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்யக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

அ) வாடிக்கையாளர்களின் தேவை அறிந்து செயற்படுதல்.
ஆ) விற்பனை தந்திரோபாயங்களை அறிந்து அதற்கேற்ப விற்பனையை விருத்திசெய்தல்.
இ) விற்பனை பிரதிநிதியாகக் கடமையாற்றிய முன்அனுபவம்.
ஈ) க. பொ. த. (சா/த), (உ/த) பரீட்சையில் சித்தி.
உ) ஆங்கிலத்தில் சிறந்த அறிவு

யாழ்.குடாநாட்டில் நிரந்தரமாக வசிக்கும் மேற்குறிப்பிட்ட தகைமைகளை உடையோர் தங்கள் சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழ்களுடன் 09-03-2003 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 - 2.00 மணி வரை நேரில் சமுகமளிக்கவும்.

முகவரி: Par Pal (L.T.D)
அரசடி சந்தி, 152, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.

(15314)



## மரண அறிவித்தல்

### வை. க. பொன்னம்பலம்

*(முன்னாள் பிரபல காலி வர்த்தகர்)*

வேலணை மேற்கு, சிறுப்பனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதர் கந்தையா பொன்னம்பலம் 05.03.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நாகரத்தினம்மா தம்பதிகளின் மருமகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் ஈசன், இரத்தினாம்பாள், மகேசன், ஸ்ரீதரன், சந்திரசேகரம், கமலாசினி, மகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரசாம்பிகை, சிவபாதசுந்தரம், கௌசல்யா, நகுலேஸ்வரி, சிவகலை, செல்லத்துரை, புவனதாசன், விசாகன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2003) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன்.ஈசன் (மகன் - ஆசிரியர்)
T.P: 01330977

(15313)

# பெண்கள் உபகுழுவுக்கு கிளிநொச்சியில் செயலகம்

## இரு நாள் கூட்டத்தில் பல தீர்மானங்கள்

கிளிநொச்சி,மார்ச்7

அரசு - புலிகள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பெண்கள் விவகாரங்களுக்கான உபகுழுவின் பிரதான செயலகம் கிளிநொச்சியில் அமையும். கொழும்பிலும் ஓர் அலுவலகம் இயங்கும்.

கிளிநொச்சியில் நேற்று முடிவடைந்த பெண்கள் விவகாரங்களுககான உப குழுவின் (Meeting of the sub - committee on gender issues) கூட்டத்தில் இந்தத் தீர்மானங்கள் எடுக் கப்பட்டன.

உபகுழுவின் முதற்கூட்டம் இதுவாகும்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட இருகுழுவினரும் பால்விவகாரம் (பெண்கள் விவகாரம்) தொடர்பான உபகுழுக் கூட்டங்களுக்குத் தேவையேற்படும் பட்சத்தில் தமக்கென இரண்டு ஆலோசகர்களைக் கொண்டு வரமுடியும்.

★ கிளிநொச்சியில் உபகுழுவுக்கான முக்கிய செயலகமும், கொழும்பில் ஓர் அலுவலகமும் அமைக்கப்படும். இவை இரண்டும் உபகுழு உறுப்பினர்களின் பணிகளில் உதவுவதற்காக நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்படும்.

★ மேற்குறிப்பிட்ட இவை இரண்டுக்குமான அலுவலர்களை நியமிப்பது, அவர்களின் எண்ணிக்கை, செயற்பாடு ஆகியன தொடர்பான தமது கருத்துக்களை அடுத்த சந்திப்பில் இரு தரப்பினரும் முன்வைப்பர்.

★ இதனது செயற்பாடுகளுக்கு பல்வேறுபட்ட சர்வதேச உதவி வழங்கும் நாடுகள், அமைப்புக் களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

★ இந்த உபகுழுவானது 2003 ஏப்ரலில் நடைபெறவுள்ள உயர்மட்ட பேச்சுக்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

★ இந்த உபகுழுவானது ஏனைய உபகுழுக்களுடனும் சமாதான நடவடிக்கைகளுடனும் தொடர்புபட்ட ஏனைய அமைப்புக்களுடனும் பெணகள் தொடர்பான பிரச்சினைகளை அவர்களது நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்வதற்காக கலந்துரையாடல்களை மேற்கொள்வதுடன் நெருக்கமான தொடர்புகளையும் பேணும்.

★ பெண்கள் விவகாரம் தொடர்பான கீழ்வரும் விடயங்களில் இந்த உபகுழு அதிகூடிய கவனஞ்செலுத்தும்.

★ சமாதான முயற்சிகளைத் தக்கவைத்தல்.

★ மீள்குடியேற்றம்.

★ தனிநபர் பாதுகாப்பு.

★ உள்ளகக் கட்டமைப்பும் சேவைகளும்.

★ ஜீவனோபாயமும் தொழில் வாய்ப்பும்.

★ அரசியல் பிரதிநிதித்துவமும், தீர்மானமெடுத்தலும்.

★ இணக்கப்பாடு.

★ SIHRN யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள துரிதப்படுத்தப்பட்ட மீள்குடியேற்றத் திட்டம், மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள அதிவேக மீள்குடியேற்றத் திட்டம் ஆகியவற்றுடன் வட - கிழக்கில் தற்போது நடைமுறையிலுள்ள மீள்குடியேற்றத் திட்டங்களுடனும் எமது உபகுழுவானது இணை ்து செயற்படும்.

★ கிழக்கில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றத் திட்டத்தைச் செயற்படுத்த SIHRN இற்கு உத்வேகமளிப்பது.

★ கிளிநொச்சியில் உளநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக SIHRN மேற்கொள்ளவுள்ள திட்டத்திற்கு ஆதரவளிப்பதுடன், போரினால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களிலும் அவ்வாறான நிலையங்களை அமைப்பதற்கு SIHRN இற்கு ஊக்க மளித்தல்.

★ ஏனைய உபகுழுக்களுக்கு பால்விவகாரம் தொடர்பான திட்டங்களை உருவாக்க வழிகாட்டுதல்.

★ இந்த உபகுழுவின் அடுத்த சந்திப்பு ஏப்ரல் 4ஆம், 5ஆம் திகதிகளில் இடம்பெறும். இருப்பினும் சமாதானத்தின் முன்னேற்றத்தைப் பொறுத்தே எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள சந்திப்புக்களுக்கான இடங்கள் பற்றித் தீர்மானிக்கப்படும்.

இந்தத் தீர்மானங்கள் அடங்கிய கூட்டு அறிக்கையை அரசுத் தரப்பு பிரதிநிதிகள் குழுவின் தலைவர் கலாநிதி குமாரி ஜெயவர்த்தனவும், புலிகள் தரப்புக் குழுவின் தலைவர் செல்வி தமிழினி சுப்பிரமணியமும், நோர்வேத் தரப்புப் பிரதிநிதி கலாநிதி அஸ்ரிம்கை பேக்கும் ஒப்பமிட்டு வெளியிட்டனர்.

(ஐ-8)

# தமிழக மீனவர்கள் கடத்தலை தடுக்க வாஜ்பாயிற்கு ஜெயலலிதா கடிதம்

சென்னை,மார்ச்7

ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை மீனவர்கள் கடத்திச் செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றுகோரி பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம எழுதியுள்ளார்.

ராமேஸ்வரத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள இந்தக் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக வாஜ்பாய்க்கு ஜெயலலிதா நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கை மீனவர்களால் தாக்கப்படுவதும், கடத்தப்படுவதும் அதிகரித்து வருகிறது. இதற்கு நிரந்தரமாக முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

கச்சதீவைச் சேர்ந்த கடல் பகுதியில் மீன்கள் அதிகம் இருப்பதால் அங்கு மட்டுமே நம் மீனவர்களால் மீன்பிடிக்க முடியும். அதை வைத்துத் தான் அவர்களது தினசரி வாழ்க்கையே நடந்துவருகிறது.

இலங்கையில் போர் நிறுத்தத்திறகுப் பிறகு வட இலங்கைப் பகுதியில மீன் பிடிக்க அந்நாட்டு மீனவர்களுக்கு அந்நாட்டு அரசு அனுமதி கொடுத்துள்ளது. அதன் பிறகுதான் இலங்கை மீனவர்கள் தமிழக மீனவர்களைக் கடத்துவதும் தாக்குவதுமாக உள்ளனர்.

இது மிகவும் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது. இந்தப் பிரச்சினையில் தாங்கள் நேரடியாகத் தலையிட்டு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

(ஐ)


சப்ரகமுவப் பல்கலைக்கழக 2002/2003, 2003/2004 கல்வியாண்டுகளுக்குரிய புகுமுக மாணவர்களுக்கான

**கலந்துரையாடலுக்கான அழைப்பு**

காலம : நாளை (08-03-2003) சனிக்கிழமை காலை 10 மணி

இடம : யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய பொதுமண்டபம்.

தமிழ்க் கலாசார மன்றம்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா.

(சி-26837)



08.03.2003

HAPPY BIRTHDAY



**செல்வி ஜெ.பிரியங்கா**

உடுவில், மான்ஸ் பாடசாலை வீதியைச் சேர்ந்த *ஜெயரட்ணம் - கலைச்செல்வி* தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரியங்கா தனது முதலாவது பிறந்தநாளை நாளை (08.03.2003) அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, பிரசன்னா, அப்பப்பா குடும்பம், அம்மப்பா குடும்பம், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார்,மாமிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பிரியங்காவை பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்பும்பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

*மான்ஸ் பாடசாலை வீதி,*
*உடுவில்.* (15312)

தகவல்:
வடிவேலு கஜேந்திரன்.


## பல்கலைக்கழக நியமனங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ்.பல்கலைக்கழக நிதிக்கிளையின் எழுதுநர் பாலசிங்கம் பாலதாஸ் கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தின் நிதி உதவியாளராக நிமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி அலுவலக எழுதுநர் செல்வலிங்கம் திருவருட்செல்வன் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் உதவி உள்ளகக் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் புதிய பதவிகளை ஏற்கின்றனர்.

(ஐ)


நாகம்ஸ் சுன்னாகம்
ஸ்ரீகாந், ஸ்நேகா நடித்த
ஏப்ரல் மாதத்தில் (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
7.00 மணிக்கும் (15306)

நிறைஞ்சனாஸ்
ஷாம், மீரா ஜஸ்மின், ரகுவரன், ஜ.வாசு நடித்த
பாலா (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பி.நே.)
"U-571" (C-26746)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
விஜய், ஸ்நேகா,
மணிவண்ணன், வடிவேலு
வசீகரா
10.30,2.30,6.30 மட்டும் (C-26827)


கிளிநொச்சியில்

# நவீன ஆஸ்பத்திரி நிறுவ இன்று அடிக்கல் நடுகை

கிளிநொச்சி.மார்ச்7

கிளிநொச்சியில் நவீன வசதிகளுடன் கூடிய வைத்தியசாலை ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல் இன்று நடப்படவுள்ளது.

உயர் அதிகாரிகள் கொண்ட குழுவுடன் இன்று கிளிநொச்சிக்கு வருகைதரும் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் றடோ சினோ வைத்தியசாலைக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நடுவார்.

சுமார் 60 கோடி ரூபா செலவில் இந்த நவீன வசதிகள் கொண்ட வைத்தியசாலை கிளிநொச்சி நகரில் இருந்து ஒரு மைல் தூரத்தில பிரதான வீதியின் அருகே அமைக்கப்படவுள்ளது.

அடிக்கல் நடும் வைபவத்தைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர், சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும் வடக்கின் 5 மாவட்டங்களின் அரச அதிபர்களும் கலந்துகொள்ளும் மாநாட்டிலும அவர் கலந்துகொள்வார்.

போரினால் அழிவுண்ட நிலையிலுள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரியினையும் மற்றும் ஏ-9 வீதி உட்பட கிளிநொச்சியில் உள்ள பல உப வீதிகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் பார்வையிடவுள்ளார். (ஐ-6-8)

# பங்குச்சந்தை குறித்து இருநாள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ்ப்பாணம் வர்த்தக, கைத்தொழில் மன்றம் பங்குச்சந்தை வாய்ப்புகள் குறித்த செயலமர்வுகளை இன்றும் நாளையும் நடத்த உள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் செயலமர்வு, இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றப் பிரதிநிதி திஸ்ஸ ஜெயவீர தலைமையிலும்-

நாளை சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் செயலமர்வு வணிக, முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் தலைமையிலும் - நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகளில பங்குச்சந்தை பற்றிய முன்னுரை, பங்குதாரர்களின் பணி, பங்கு முதலீடு, சந்தை நிலவரை ஆய்வு ஆகிய தலைப்புகளில் பங்கு வர்த்தக நிபுணர்கள் உரையாற்ற உள்ளனர். இச்செயலமர்வுகள் தமிழ் மொழியில் நடத்தப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(ஓ)

# இராணுவ உயர் அதிகாரிக்கு எதிராக பெண் உயரதிகாரி மானநஷ்ட வழக்கு

கொழும்பு,மார்ச்7

இராணுவ மேஜர் ஒருவருக்கு எதிராக நாற்பது லட்சம் ரூபா நஷ்டஈடுகோரி பெண் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இராணுவ மேஜர் ஜயனத்தி என்பவருக்கு எதிராக லெப்டினன் கேணலாக பணிபுரியும் பெண் அதிகாரியான கமல்குமாரி டயஸ் என்பவரே வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் ரணில் தர்மசேகர முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

லெப்டினன் கேணலாக பணிபுரியும் பெண் அதிகாரியின் மீது கடமை சீர்கேடு தொடர்பாக இராணுவ விசாரணை மேற்கொண்ட மேஜர் ஜயனத்தி தவறான வாக்குமூலத்தைப் பதிவு செய்து தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார் எனப் பிரஸ்தாப பெண் இராணுவ அதிகாரி, இராணுவ மேஜா மீது குற்றஞ்சுமத்தியுள்ளார். தவறான முறையில் தனது வாக்குமூலத்தை பதிவு செய்ததன் மூலம் தனது பதவிக்கும் தனக்கும் அகௌரவத்தை ஏற்படுத்திவிட்டார். எனவே இராணுவ மேஜரிடமிருந்து மானநஷ்ட ஈடாக 40 லட்சம் ரூபா பெற்றுத்தரவேண்டும் என்றுகோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு மே மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## "தேனீக்கள்" சஞ்சிகை வெளியீடு

சுன்னாகம், மயிலணி ஜனசக்தி இளைஞர் கழகத்தினரின் "தேனீக்கள்" கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெற உள்ளது.


# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம் பசுபதி

நல்லூரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் பசுபதி 02.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2003) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகன் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (15316)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி றெபேக்கா தீயோகுப்பிள்ளை (இராசம்மா)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இல.828, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றெபேக்கா தீயோகுப்பிள்ளை அவர்கள் நேற்று (06.03.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தீயோகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் பீற்றர் இம்மானுவல் (இளைப்பாறிய மத்திய வங்கி உத்தியோகத்தர்), அன்ரன் அருள்நாயகம் (இளைப்பாறிய தபால் அதிபர்), ஸ்ரனிஸ்லாஸ் யேசுதாசன் (நோர்வே), சறோஜா, றோசறி, பற்றிமா, சேவியர் மதுரநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நீக்கிலஸ், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பிரான்சிஸ்கா (முத்தம்மா - இளைப்பாறிய அதிபர்) காலஞ்சென்ற யோசவ் (இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற மேரி யோசவின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வம் (இளைப்பாறிய ஆசிரியை, லண்டன்), றீற்றா (இளைப்பாறிய ஆசிரியை), லோறா (லண்டன்), வின்சஸ்லோஸ், ஸ்ரனிஸ்லோஸ், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் காந்தி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெனிற்றா, பெனிற்றா, றொசிற்றா, சுவீற்றா, சுரேஸ்குமார், பமிலா, கஷ்ல்டா, வினோ, நிஷாந்தினி, றெனோ, நிலுஜா, டியூரன், டியூலா, யோன்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*42,கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15318)

தகவல்:
பீற்றர் இம்மானுவல்,
அன்ரன் அருள்நாயகம்.

## ஆசிரிய நியமனங்கள் வழங்குவதில்

# கல்வியமைச்சின் கொள்கைக்கு முரணாக வடக்கு - கிழக்கு மா.சபை நடவடிக்கை

### தடுத்து நிறுத்த ஆளுநரிடம் பட்டதாரிகள் ஒன்றியம் கோரிக்கை

கல்முனை,மார்ச்7

ஜி.சஈ.உயர்தரப் பரீட்சையின் அடிப் படையில் பெற்ற புள்ளிகளின்படி ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனங் களை வடக்கு - கிழக்கு மாகாணசபை எடுத்துவருகின்ற நடவடிக்கை மத் திய கல்வி அமைச்சின் கொள்கைக்கு முரணான செயலாகும்.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள பக்ஸ் செய்தியொன்றில தெரிவித்ததாவது:-

ஒன்றியத்தின் தலைவர் எம்.எஸ். எம். முஸாபீர், செயலாளர் ஏ.ஆர். ஜருல்லாஹ் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வேலையற்ற பட்டதாரிகளின் தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்ற சூழ்நிலையில் ஜி.சஈ.உயர் தரப் பரீட்சையின் அடிப்படையில் ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம வழங்க முற்படுவது பட்டதாரிகள் மத்தியில் அதிர்ச்சியையும் வேதனை யையும் ஏற்படுத்தியுள்ளது.

இனிமேல் பட்டதாரிகளுக்கும், கல்விக் கல்லூரிகளில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறுபவர் களுக்கும் மட்டுமே ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு புதிய கொள்கை ஒன்றை வெளி யிட்டிருக்கும் நிலையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை அக்கொள் கைக்கு முரணாகச் செயற்பட முனை வது ஏன்?

எனவே, இந்த ஏற்பாட்டைத் தடை செய்துவிட்டு வேலையற்ற பட்டதாரிக ளுக்கு மட்டும் முதலில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம். எமது கோரிக்கை உதாசீனம் செய்யப்படுமானால் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத் துப் பட்டதாரிகளையும் ஒன்றிணைத்து சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்துவோம்.

- இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

---

### ஜப்பான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:-

★ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஏற் படும் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் வழிகள், யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் தீர்மானங்களை அமுல் படுத்தும் நடைமுறை.

★ புலிகள் இயக்கத்தின் இராணு வத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்களின் பராமரிப்பு, கல்வி, எதிர்காலம்.

★ சமஷ்டி முறை அதிகாரப் பகிர்வில் நிதி நடவடிக்கைகள்.

★ ஜூன் மாதம் ஜப்பானில் இடம் பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கான முன்னேற் பாடுகள்.

ஜப்பான் பேச்சுகளுக்கான முன்னேற் பாடுகள் அடுத்த வாரத்தில் மேற்கொள் ளப்படும். அதற்காக வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் இங்கு வருகை தருவார்கள். அவர்கள் கொழும்பிலும கிளிநொச்சியிலும் அரசு - புலி தலை வர்களுடன் பேச்சு நடத்துவார்கள்.

நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், கனே டிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரைய்ஹம், சர்வதேச மனித உரிமை கள் அமைப்பின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டீன் ஆகியோர் அடுத்த வாரம் இலங்கை வருவர். இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும கிளிநொச்சியில் புலிகள் இயக்கத தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

(ஐ-12)

---

### புலித்தேவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பியசேன திஸநாயக்க, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக தென்னக்கோன் ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்.

எதிர்மனுதாரர்களாக சங்கப் பணிப் பாளர் நாயகம், நோர்வேத் தூதுவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சமாதானப் பேரவையின் செயலாளர் புலித்தேவன், தகவல்துறை, ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக் கார், அமைச்சின் செயலாளர் குமார் அபேசிங்க ஆகியோர் எதிர் மனுதாரர் களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம் மாதம் 31ஆம் திகதி நீதி மன்றில் ஆஜராகுமாறு அவர்களுக்கு அழைப்பாணை விடுக்க நீதிமன்றம் பணித்தது.

(ஐ-12)

# காணாமற் போனோர் விவகாரம்: பிரபா, ரணில் இருவருக்கும் கடிதம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த ஆவன செய்யுமாறு கோரி புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாதுகாவலர் சங்கம் கடிதங்களை எழுதியுள்ளது.

படையினரால் கைதுசெய்யப்பட்ட வர்களில், கொல்லப்பட்டவர்கள் தவிர்ந்த எஞ்சியோரின் நிலையினை தெளிவாக வெளிப்படுத்தி உதவ வேண்டுமென பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவிடம் சங்கம் கோரியுள்ளது. ஏற்கனவே உறுதி அளிக்கப்பட்டபடி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது குறித்து சங்கம் ஏமாற்றம் தெரிவித் துள்ளது.

காணாமற் போனோர் பற்றிய உண்மையை வெளிப்படுத்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க தேவை யான நடவடிக்கைகளை எடுக்கவேண் டும் என்று புலிகளின் தலைவர் பிரபாகரனிடமும் பாதுகாவலர் சங்கம கேட்டுள்ளது.

(ஐ-9)

## வேலை நிறுத்தம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்கு-கிழக்கில் நடைபெறவுள்ள ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மற்றும் பேரணி என்பன தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை சனிக் கிழமை காலை 10.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல கிளைகள் மற்றும் வலய அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் மாவட்ட தாய்ச்சங்க நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (ஐ-10)

---

### ஸி.ரீ.ஸ்கான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியில் டாக்டர் வி.குணானந்தன நீண் டகாலமாக கடும் முயற்சி எடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலை மற்றும் மூளையுடன் சம்பந தப்பட்ட மருத்துவ சோதனைகளுக்கு இக்கருவி பெரிதும் உதவியாக இருக் கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணத்தில் விபத துக்களில் காயமடைவோரின் எண் ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் இக்கருவி இங்கு கிடைப்பது உயிராபத துகளைத் தவிர்க்க உதவும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

---

### சுடர்ஒளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியதாகக் கூறப்படுகிறது.

தனது தாயாருடன் கடைக்குப் பொருள்கள் வாங்கச் சென்றிருந்த விநோதினி, அதனை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிய சம யமே வீட்டு வாசலுக்கு அண்மையில இந்த அவலத்தை எதிர்கொள்ள வேண்டிய வரானார்.

படுகாயமுற்ற விநோதினி களு போவில வைத்தியசாலைக்கு எடுத் துச் செல்லப்பட்ட சமயம் அங்கு காலமானார்.

துடிப்போடும், சுறுசுறுப்பாகவும், திறமையாகவும் பணியாற்றி வந்த விநோதினியின் திடீர் மறைவு 'சுடர் ஒளி', 'உதயன்' குடும்பத்தை அதிர்ச் சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான விநோதினி, 2001 ஒகஸ்டில் கணனிப் பொறியியலாளரான திலீபனை திரு மணம் செய்திருந்தார்.

(ஐ)

## தமிழக மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத் தரவிட்டார்.

இதேவேளை, இலங்கை - இந்திய மீனவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பின்போது காயமடைந்த 17 தமிழக மீனவர்களில 12 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

காயமடைந்த படகோட்டிகள் ஐவரும் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள 26 பேரில் அடங்குவர்.

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 17 இந்திய மீனவர்களில் 12 பேரை நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தாமலே விடுவித்த பொலீஸார் எஞ்சிய 5 பேரை மட்டும் நேற்று நீதி மன்றத்தில் ஆஜர் செய்தனர்.

17 இந்திய மீனவர்களையும் வைத்திய சிகிச்சையின் பின்னர் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் எம்.பி.முகைதீன் ஏற்கனவே உத்தர விட்டிருந்தார். ஆயினும், ஐவர் மட்டுமே மன்னார்பொலீஸாரால் ஆஜர் செய்யப் பட்டனர்.

அவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், ஏனைய 12 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் விடுவித்த பொலீஸார் மீது நீதிமன்றத்தை அவமதித்த குற் றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு நீதிமன்ற பொலீஸாருக்கு உத்தரவிட்டார். *(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)*

---

### சாகும்வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடரப்பட்டுள்ளன. இவர்களை விட வெலிக்கடைச் சிறைச்சாலையில் 7 பெண் கைதிகள் உள்ளனர்.

தேசியத்தலைவர் வே.பிரபாகரன் தமது விடுதலை தொடர்பாக காட்டி வரும் அக்கறைக்கு கைதிகள் நன்றி தெரிவித்தனர்.

வழக்குகளை அவர்களின் சொந்த இடங்களுக்கு மாற்றி அங்குள்ள நீதி மன்றங்களில் விசாரணை செய்வது பற்றி சட்டமா அதிபருடன் நேற்று முன் தினம் பேச்சுக்கள் நடத்தினேன். அவர் இந்த விடயம் தொடர்பாகப் பரிசீலிப் பதாக என்னிடம் கூறினார்.

இன்று கைதிகளைப் பார்வையி டுவதற்காக மன்னார்ஆயர் இராயப்பு ஜோசப் களுத்துறைக்குச் செல்ல வுள்ளார் எனத்தெரிகிறது-என்றார்.

(ஐ)

---

### தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அவர் மேலும் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

100 அலகுகளுக்கு குறைந்த அழைப்புக்களை மேற்கொள்பவர்க ளுக்கு ஒரு அலகுக்கு ஒரு ரூபா 10 சதம் கட்டண அதிகரிப்பும், 500 அலகுகளுக்கு மேல் அழைப்புகளை மேற்கொள்பவர்களுக்கு அலகு ஒன் றுக்கு 3ரூபா 50சத கட்டண அதிகரிப் பும் இதுவரை காலமும் நடைமுறை யில் இருந்து வந்தது.

இந்த வித்தியாசமான கட்டண அதிகரிப்பு இனி மாற்றி அமைக்கப்படு கிறது. புதிய முறையின்படி ஒரு அலகுக்கான கட்டண அதிகரிப்பு 2ரூபா 85 சதம் என்று வரையறுப்பதற் காகவே ரெலிக்கொம் நிறுவனம் முயற்சிக்கிறது.

வாடிக்கையாளர் ஒருவரின் தொலைபேசி இணைப்பை நிர்வகிப்ப தற்கு மாதாந்தம் 1,000 ரூபா வரை செலவாகிறது. ஆனால், மாதாந்தக் கட்டணமாக 200 ரூபா மட்டுமே வாடிக்கையாளர்களிடமிருந்து அறவி டப்படுகின்றது - என்றார் அவர்.

(ஐ)


பல வருடங்களின் பின்
மீண்டும் யாழ்நகரில்
K.R.S. - No. I சம்பா
K.R.S. - No. I ரோஸ்நாடு
எல்லா வர்த்தக ஸ்தாப னங்களிலும் கிடைக்கும்.
(15196)

மலிவு விற்பனை
குரோட்டன், சைப்பிரஸ், எக்ஸ் சோறா, செவ்வரத்தை (Y.D.) கடதா சிப்பூ, முசந்தாஸ் (சிவப்பு, வெள்ளை) ஆகிய கன்றுகள் இன்றுமுதல் ஞாயிறு வரை மலிவுவிலையில் பெற்றுக் கொள்ளலாம்.
கிறீன் பாக்
152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(V.C.R.C. இற்கு அண்மையில்)
(15520)


NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
'Fields'
ஆரம்பம் : 08.03.2003 Sat. 6a.m.
'Heat' Sat., Sun. 7-8 a.m.
'Basic' Sat., Sun. 8-9 a.m.
BY : கருணாநிதி
✻ 08.03.2003 இல் இருந்து யாழ்நக ரில் நடைபெற்ற சகல வகுப்புகளும் New Science Centre இல் மட்டும் நடைபெறும்.

ORGANIC
Sat., Sun. 10-11 a.m.
ஆரம்பம் : 09.03.2003 10 a.m.
"CHEMISTRY PAPER"
Sat., Sun. 11-12 a.m.
ஆரம்பம் : 09.03.2003
BY : அன்பழகன்
(15321)

IIS இன் விசேட கற்கை நெறிகள்
09. 03. 03 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன.
மேலதிக விவரங்கள் 8 ஆம் பக்கத்தில்
(15268)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் : 23.03.2003
நேரம் 10.00 மணி
IIS யாழ்ப்பாணம்

தென்னிந்தியாவில் இருந்து


முதன்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை.
ராஜகுருசாமி
மில்லன்ஸ் மல்டி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(15244)

பெருமிதமடைகின்றோம்
மிகவும் நெருக்கடியான காலத்தில் கொழும்பில் தங்கிநின்று பல் கலைக்கழக பணிகளை ஒருமுகப்படுத்திய யாழ்ப்பாணப்பல்கலைக் கழக நிதிக்கிளையைச் சேர்ந்த எழுதுநரும் எமது நண்பருமான
திரு.பாலசிங்கம் பாலதாஸ்
அவர்கள் *உதவி நிதியாளராக* கிழக்கிலங்கை பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்திற்கு பதவி உயர்வு பெற்றுச்செல்வதையும
மிகவும் நெருக்கடியான காலத்தில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பீடம் இயங்குவதற்கு உறுதுணையாக நின்ற விவசாய பீடாதிபதி அலுவலக எழுதுநரும் எமது நண்பருமாகிய
திரு.செல்வலிங்கம் திருவருட்செல்வன்
*உதவி உள்ளகக் கணக்காய்வாளராக* கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்திற்கு பதவி உயர்வு பெற்றுச் செல்வதையுமிட்டு பெருமிதம் அடைகிறோம்.
முன்னாள் அமைய எழுதுநர் (1991 - 1992)
யாழ். பல்கலைக்கழகம்.
(15310)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
பாதுகாப்பான - சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/26688)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பலஸ்தீனர்களின் தற்கொலைத் தாக்குதலை அடுத்து பழிவாங்கும் நடவடிக்கையை இஸ்ரேல் படை ஆரம்பித்தது!

## நள்ளிரவு மோதல்களில் 11 பலஸ்தீனர் பலி!

ஜெருசலேம்,மார்ச் 7

பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள காஸாவில் நள்ளிரவில் புகுந்து பழிவாங்கும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது இஸ்ரேல். இதில் குறைந்தது 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்று முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. மேலும் பலர் காயமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இஸ்ரேலில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்குப் பழிவாங்கும் வகையில் இந்த இராணுவ நடவடிக்கை நடத்தப்பட்டது.

இஸ்ரேலின் வடபகுதி நகரான ஹைபாவில் நேற்றுமுன்தினம் பயணிகள் பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 15இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 40 பேர் காயமடைந்தனர்.

தாக்குதலை நடத்திய தற்கொலையாளியும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத தற்கொலைத் தாக்குதலை அடுத்து பலஸ்தீனத்துடனான காஸா மற்றும் மேற்குக்கரை எல்லைகளை உடனடியாக மூடிவிட இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை முடிவு செய்தது. தாக்குதலை அடுத்து அவசர அவசரமாகக் கூடிய அமைச்சரவை எந்த ஒரு பலஸ்தீனரையும் இஸ்ரேலிய நிலப்பரப்புக்குள் நுழைய விடுவதில்லை என்றும் தீர்மானித்துள்ளது.

தாக்குதலுக்குப் பதிலடியாக பலஸ்தீனப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டது. அதனை அடுத்து - தாக்குதல் நடந்த ஒரு நாளின் பின்னர் - இஸ்ரேலிய இராணுவம் தனது பழிவாங்கும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது.



ஹைபாவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் சிதைந்த பஸ்ஸில் மீட்புப் பணிகள் இடம்பெறுகின்றன.

இஸ்ரேலிய துருப்புக்கள், டாங்கிகள் மற்றும் ஹெலிகளின் துணையுடன் காஸா அருகே உள்ள ஜபாலியா என்ற நகரில் உள்ள அகதி முகாமை நோக்கி புதனன்று நள்ளிரவில் முன்னேற ஆரம்பித்தன.

அவர்களின் இந்த இராணுவ முன்நகர்வின் போது குறைந்தது 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். மேலும் டசின்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இஸ்ரேலிய டாங்கிகள் இரண்டு கும்பலாக நின்ற பலஸ்தீனர்களை நோக்கி நடத்திய தாக்குதலிலேயே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை பற்றிய விவரங்களை இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் நேற்று நண்பகல் வரையில் வெளியிடவில்லை. தமது படைகள் பலஸ்தீனப் பகுதிக்குள் புகுந்துள்ளன என்பதை மட்டும் அவர்கள் உறுதிப்படுத்தினர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று பலஸ்தீன உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்ததாக பி.பி.ஸி. செய்தி வெளியிட்டது.

இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோன் தீவிர வலதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அரசு ஒன்றை அமைத்த சில நாள்களில் பலஸ்தீனர்களின் தற்கொலைத் தாககுதலும், அதைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹைபாவில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல், பலஸ்தீன அதிகாரிகள் தீவிரவாதத்துக்கு எதிராக எந்தவோர் உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன என்று இஸ்ரேலிய அதிகாரிகள் விசனம் தெரிவித்தனர்.

ஆனால், ஹைபா தாக்குதலை பலஸ்தீன அதிகாரசபை கடுமையாகக் கண்டனம் செய்துள்ளது. அமெரிக்க அதிபர் புஷ்ஷும் இந்தத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

## ஐ.நா.பிரதிநிதிகளை அமெ. உளவு பார்க்கிறது

நியூயோர்க்,மார்ச்7

ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை அமெரிக்க புலனாய்வு அமைப்புக்கள் உளவு பார்த்து வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'லண்டன் ஒப்சேவர்' என்ற வார இதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. பிரதிநிதிகளுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் ஈ-மெயில்கள் என்பவற்றை அமெரிக்காவில் உள்ள தேசிய பாதுகாப்பு ஏஜென்ஸி இடைமறித்து உளவு பார்க்கின்றது என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐ.நா. பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் இந்த விடயத்தைப் பெரிதுபடுத்தவில்லை. "இதெல்லாம் தெரிந்த விடயங்கள் தானே. எனினும் பிரதிநிதிகள் மேலும் விழிப்புடன் இருக்க வேண்டும்" - என்றார் ஒரு பிரதிநிதி.

ஈராக் தொடர்பாக பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது தீர்மானம் தொடர்பாக பிரதிநிதிகள் என்ன நினைக்கின்றார்கள் என்று உடனுக்குடன் அறிந்து கொள்வதற்காகவே அமெரிக்கா இப்படிச் செய்கின்றது என்று கூறப்படுகின்றது.

## பின்லேடன் பாகிஸ்தானில் இல்லையாம்!

இஸ்லாமாபாத்,மார்ச்7

அமெரிக்காவால் சர்வதேச பயங்கரவாதி என்று குறிப்பிடப்படும் அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானில் மறைந்துள்ளதாக வெளியான செய்திகளை அந்த நாட்டு தகவல்துறை அமைச்சர் அடியோடு மறுத்துள்ளார்.

பின்லேடன் இறந்திருக்கலாம் அல்லது வேறு எங்காவது தப்பிப் போயிருக்கலாம் என்று பாகிஸ்தானின் தகவல்துறை அமைச்சர் ஷேக் ரஷீட் அஹமட் தெரிவித்தார்.

அண்மையில் அல்கெய்டா அமைப்பின் உயர் தலைவர் ஒருவர் பாகிஸ்தானில் வைத்து அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து ஒஸாமா பின்லேடனின் கைப்பட எழுதிய கடிதம் ஒன்று சிக்கியதாக செய்திகள் வெளியாகின. அதனை அடுத்து பின்லேடனும் பாகிஸ்தானில்தான் இருப்பதாக நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில பேசிய பாகிஸ்தான் அமைச்சர் அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

ஆனால், பின்லேடன் இன்னும் பாகிஸ்தானில் எங்கேயோதான் மறைந்து வாழ்வதாக அதிகாரிகள் உறுதியாக நம்புகின்றார்கள்.

(ம)

## வர்த்தகத் தொகுதியில் பெரும் குண்டு வெடிப்பு

### கொலம்பியாவில் 7 பேர் பலி; 60 பேர் காயம்!

பொகோட்டா,மார்ச்7

கொலம்பியாவின் வடகிழக்கு நகரம் ஒன்றில் உள்ள வர்த்தகத் தொகுதி ஒன்றில் பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதில் குறைந்தது 7 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; 60க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

குகுடா என்ற அந்த நகரத்தில் உள்ளூர் நேரப்படி காலை 9.40 மணியளவில் இந்த குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. இடதுசாரித் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று பொலீஸார் தெரிவிததனர்.

கடைத்தொகுதியின் அடித்தளத்தில் இருந்த கார் தரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது. பெரும் குண்டுச் சத்தமும அதைத் தொடர்ந்து எழுந்த பெரும் தீயும் அந்த வர்த்தகத் தொகுதியில் இருந்தவர்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கியது.

"நாங்கள் மிகப்பெரும் வெடிச் சத்தத்தைக் கேட்டோம். அதைத் தொடர்ந்து பெரும் தீப்பிழம்புகள் கட்டடத்தைச் சூழ்ந்து கொண்டன" - என்றார் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட தீ விபத்தில் வர்த்தகத் தொகுதியில் இருந்த கடைகள் சில தீப்பற்றி எரிந்தன.

இந்த நகரம் கொலம்பியாவிலேயே அதிகூடிய உயிரிழப்புக்கள் ஏற்படும் நகரமாக அண்மைக் காலமாக மாறியுள்ளது.

குண்டுவெடிப்பால் ஏற்பட்ட தீயை அடுத்து அங்கிருந்து வெளியேற முடியாமல் பெரும் எண்ணிக்கையானவர்கள் நெரிசலில் சிக்கிக் கொண்டனர். இதனாலேயே பலர் காயமடைய வேண்டி வந்ததாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு கார்க் குண்டு ஒன்றே காரணம் என்று முதலில் தெரிவித்த பொலீஸார், பின்னர் மூடப்பட்டிருந்த கார் தரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிப்பொருளே இதற்குக் காரணம் என்று தெரிவித்தார்கள்.

கடந்த சில மாதங்களாகவே குடா நகரில் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ம)

## போரை எதிர்கொள்ள ஈராக் ஒத்திகை



ஈராக்கில் பெண்கள் பொலிஸ்படை தற்கொலை அங்கிகளை அணிந்தவாறு அணிவகுப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பாக்தாத்,மார்ச்7

குவைத் எல்லையில் ஈராக் தனது படைகளை குவித்து வருகிறது. ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் குவைத் மீது ஈராக் படையெடுக்க தயாராகி வருகிறது. பாக்தாத் நகரில் ஈராக் இராணுவம் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

வளைகுடா பகுதியில் 2 லட்சத்துக்கு மேற்பட்ட அமெரிக்க துருப்புகளை அமெரிக்கா குவித்து வைத்துள்ளது. அமெரிக்கா விமானம் தாங்கி போர்க்கப்பல்களும் வளைகுடாவில் முகாமிட்டுள்ளன. அமெரிக்கப்படைகளுக்கு உதவியாக இங்கிலாந்தும் 50 ஆயிரம் போர் வீரர்களை அனுப்பி வைத்துள்ளன. இந்த நிலையில் மேலும் 60 ஆயிரம் வீரர்களை அமெரிக்கா அனுப்பிவைக்கவுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதை சமாளிப்பது எப்படி என்பது குறித்து ஈராக் போர் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. பாக்தாத் நகரிலும் பாஸ்ரா நகரிலும் பாதுகாப்பு ஒத்திகை இரவும், பகலும் நடைபெற்று வருகிறது.

பாக்தாத் நகரில் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் அணிவகுத்து சென்றனர். டாங்கிகளும் அணிவகுத்துச்சென்றன. பாஸ்ரா உட்பட பல் வேறுநகரங்களில் நவீன ஹெலிகொப்டர்கள் வட்டமடித்து பறந்தபடி கண்காணித்து வருகின்றன.

ஈராக் எல்லையை ஒட்டியுள்ள குவைத் எல்லையிலும் ஈராக்கின் படைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. 200 கிலோமீற்றர் தூரத்துக்கு குவைத் எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் ஈராக் துருப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஏராளமான டாங்கிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் குவைத்மீது ஈராக் மீண்டும் படையெடுக்கும் அபாயம் எழுந்துள்ளது. போர் அபாயம் அதிகரித்து வருவதை தொடர்ந்து ஈராக்கில் உள்ள ஐ.நா.சபை அதிகாரிகளை உடனடியாக திரும்பிவிடும்படி அமெரிக்கா உத்தரவிட்டு இருக்கிறது.

(ம)

# போர் தொடர்பான தீர்மானம் நிறைவேறவிடப்போவதில்லை; ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி திட்டவட்டமாகத் தெரிவிப்பு!

லண்டன்,மார்ச்7

ஈராக்குக்கு எதிராகப் போர் தொடுக்க அனுமதிக்கும் பிரேரணையை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேறவிடப்போவதில்லை என்று ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

அதேசமயம் -

சமாதான வழியில் பேரழிவு ஆயுதங்களைக் களைய ஈராக்குக்கு மற்றொரு கடைசிச் சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் மேலும் சில நாள்களையோ, வாரங்களையோ காலக்கெடுவாக வழங்கலாம் என்று பிரிட்டன் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளதாக ஐ.நா. அறிக்கைகள் தெரிவித்தன.

ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் பாதுகாப்புச் சபையில் இன்று தனது அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார். அதன் பின்னர் ஈராக் தொடர்பான முடிவை எடுப்பதற்கு பிரிட்டன் இராஜீய முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த விவகாரத்தில், சிதறுண்டுள்ள பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியிலும் அது ஈடுபட்டுள்ளது.

ஈராக்குக்கு வழங்கப்படும் கடைசிச் சந்தர்ப்பத்தையும் அது சரியாகப் பயன்படுத்தவில்லையாயின் அதன் மீது போர் தொடுக்கப்படவேண்டும் என்பதே பிரிட்டனின் நிலைப்பாடு என்று ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், போருக்கு அனுமதி அளிக்கும் தீமானத்தை பாதுகாப்புச் சபையில் நிறைவேற இடமளிக்கப் போவதில்லை என்று ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி என்பன திட்டவட்டமாகக் கூறிவிட்டன. ஈராக்கில் ஆயுதப் பரிசோதனையில் ஈடுபட ஐ.நா. பரிசோதகர்களுக்கு மேலும் காலக்கெடு வழங்கப்படவேண்டும் என்று அவை தெரிவிக்கின்றன. மேலும் பல உறுப்பு நாடுகளும் இந்த நிலையை ஆதரிக்கின்றன.

இதனால், இப்போது அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஈராக் தொடர்பான இரண்டாவது தீர்மானம் பாதுகாப்புச் சபையில் நிறைவேறுமா என்பது பெரும் கேள்விக்குறியாகி உள்ளது. அது இரு வழிகளில் தோற்கடிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஒன்று தீர்மானத்தை நிறைவேற்றத் தேவையான 9 பெரும்பான்மை வாக்குகளை திரட்ட அமெரிக்காவால் முடியாமல் போகலாம். அல்லது வீற்றோ அதிகாரம் பயன்படுத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படாமல் செய்யப்படலாம். ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகியவை பாதுகாப்புச் சபையில் வீற்றோ அதிகாரத்தைக் கொண்ட நிரந்தர உறுப்பு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.




ஈராக் மீது போர் வேண்டாம் என சிட்னியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் கல்லூரிமாணவர்கள்

இதற்கிடையில் -

ஐ.நாவுக்கான ஈராக்கிய இராஜதந்திரிகள் இருவர் 72 மணித்தியாலங்களுக்குள் அமெரிக்காவை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமது தகுதிக்கு மீறி காரியங்கள் ஆற்றினார்கள் என்பதே அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.




# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல.2477012 இருந்து
2495535 வரை
சீட்டிழுப்பு இல. 1381
திகதி 05.03.2003

## வெற்றி எண்கள்

**07 16 21 29 46**

போனஸ் எண் **20**

ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 | 121 | 10,000/- | 1,210,000/- |
| 3 | 5,736 | 500/- | 2,868,000/- |
| 2 | 97,006 | 20/- | 1,940,120/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 07ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 118,432 | 10/- | 1,184,320/- |

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா.2,418,500/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,602,440/-

தொடர் இல. 3474779க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 08ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2482976-9-56
2481926-1-36
2492087-5-47
2479197-8-12
2483134-7-98

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்

'உதயன்' நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

இலங்கையின் முதற்தர கணனிச் சஞ்சிகை நடத்தும்

## மாபெரும் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு - 2003

* நெல்லியடி மத்திய கல்லூரி (நெல்லியடி)

*காலம்:* நாளை 08.03.2003 காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை.
(பாடசாலை மாணவர்கள் மட்டும்)

*காலம்:* 09.03.2003 காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. (ஏனையோருக்கு)

**கருத்தரங்கில் உள்ளடங்கும் விடயங்கள்**

1. தகவல் தொழில்நுட்பமும் நாமும்
2. இயக்க அமைப்புகள் வின்டோஸ் 98/2000/xp
3. இணையமும் மின் அஞ்சலும்
4. தகவல் தொழில்நுட்பத்தில் காணப்படும் கற்கை நெறிகள்
5. இலங்கையில் பிரபல்யமான கணனிக் கற்கை நெறிகளும் அதனைத் தொடர்வதற்கு வேண்டிய தகைமைகளும்.
6. சான்றிதழ் வழங்கும் வைபவம்

பங்குபற்றும் அனைவருக்கும்
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் பாடக்குறிப்பேடுகளும் வழங்கப்படும்.

ரிக்கெட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.
*கட்டணம்:* பாடசாலை மாணவர்களுக்கு 50/- ஏனையோருக்கு 100/-

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸின் கருத்தரங்கு யாழ்.நகரில் மீண்டும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஊடக அனுசரணை: உதயன்

(C/26813)

Powered by:

அனுசரணை: INSTITUTE OF INFORMATICS STUDIES

WINTECH COMPUTERS
Total Computers Solution

**AIZEN INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
NO:07, 57th Lane, Colombo - 06, Tel: 01-361381, 0777 397962


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் J/326

**உயர்திரு.**

**சுப்பிரமணியம் தங்கமயிலோன்**

அவர்கள் தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல உயர்வுகள் பெற்றுச் சீரோடும், சிறப்போடும் வாழ ஆண்டவன் அருள் வேண்டி நிற்கின்றோம்.

*கொடிகாமம் வடக்கு, J/326*
*கொடிகாமம்.*

\- மக்கள்.

(C/26820)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

**கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தில் 31.05.2002இற்கான கிராமிய வங்கிகளின் கணக்கு மீதிகள் கணக்காய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட இருப்பதனால் குறிப்பிட்ட கிராமிய வங்கியில் கணக்குகளை வைத்திருப்போர் தங்கள் கையேடுகள்ளைச் சமர்ப்பித்து கணக்கு மீதிகளை 15.03.2003ஆம் திகதிக்கு முன் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கா.நடராசா
தலைவர்.

(C/26814)


மணிக்குரல் மணிவதனன் + ஜெயச்சித்திரா

## 8ஆம் ஆண்டு ஞாபகார்த்தம்

கண்களும் செவிகளும் கலந்து இன்புறும்

**கலைப்போட்டிகள்**

நிகழ்ச்சிகள்

ஸ்ரீகாந்த் எஸன்ஸ் அன் குறோசரீஸ் ஆதரவில் **தேன் இசை மழை** (போட்டி)
பவானி விலாஸ் கச்சான் அல்வா ஆதரவில் **பாட்டுக்குப் பாட்டு** (போட்டி)
R.B. புக்கிங் சென்ரர் ஆதரவில் **பிறேக் டான்ஸ்** போட்டியுடன்
நடனத்தென்றல் ஜோன்சன்குழு வழங்கும் **பிறேக் நடனமும்** இடம்பெறும்.
ஸ்ரீராம் கஜன் மிக்ஷர் நிறுவன ஆதரவில் **அறிவிப்பாளர் அறிமுகம்** (போட்டி)
V.S.P. நல்லெண்ணை பரிமளா ஸ்ரோர் ஆதரவில்
இசைச் சக்கர வர்த்திகள் **சாரங்காவின் ராஜராகம்**

இடம்: யாழ்.மத்திய கல்லூரி கலை அரங்கு
காலம்: 09.03.2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 2மணிமுதல் 7.30 மணிவரை

**கட்டணம் 25/-**

*ரிக்கெட் கிடைக்குமிடம்* - கோலம்ஸ் சில்க்ஸ், மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
லாவண்யா பல்மூக்குக் கண்ணாடி அகம்
553, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(ஆஸ்பத்திரி வைரவர் கோயில் முன்பாக).

V.S.சற்குணன்
மணிக்குரல் விளம்பர சேவை,
52, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 0777 158476

(15298)


## 31ஆம் நாள் நினைவலைகள்



*கந்தன் மலரடியில்*
15
10
1937

*காலனின் பிடியில்*
05
02
2003

**அமரர் முத்து தெய்வேந்திரம்**

வேர் ஒன்று விழுதெறிந்து
விழுதுகளை விருட்சமாக்கி
பார் எங்கும் பரவவிட்டு
"கார் ஐயா" நாமத்துடன்
ஊர் அறிய இருந்தவரே!

உம் ஆத்ம சாந்திக்காய் உளமார வேண்டுகின்றோம்.

முகவரி: *கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

\- பாச உறவுகள்.

(15294)

## இலங்கை அமைதி முயற்சிகளில்

# ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளும் ஜே.வி.பியுடனான கூட்டும் அருவருக்கத்தக்கவை!

## 'தினமணி' ஆசிரியர் தலையங்கம் கருத்து

சென்னை,மார்ச்7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை அமைதி முயற்சியில் நடந்து கொள்ளும் விதமும் அவர் ஜே.வி.பியுடன் இணைந்து கூட்டணி அமைக்கும் முயற்சியும் அருவருக்கத்தக்கவை - இவ்வாறு சாடியிருக்கிறது இந்திய நாளிதழான 'தினமணி'.

அதன் நேற்று முன்தின பதிப்பில் 'விரக்தியால் விபரீதம்' என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈழப்பிரச்சினையில் நோர்வேயின் சமரச முயற்சிகளாலும் பிரதமர் ரணில விக்கிரமசிங்க அரசும் விடுதலைப்புலிகளும் காட்டிவந்துள்ள விவேகத்தாலும் நெருடலான பிரச்சினைகள் பல சமாளிக்கப்பட்டிருக்கின்றன.

அதிலும், குறிப்பாக தனி ஈழக் கோரிக்கையை புலிகள் கைவிடச் சம்மதித்து இருப்பதுடன் ஒன்றுபட்ட இலங்கையின் ஓர் அங்கமாக பூரண சுயாட்சி உரிமையுடைய ஈழத்திட்டத்துக்கு இணங்கியிருக்கிறார்கள். இரு தரப்பின் சாதுர்யத்துக்கும் ராஜதந்திர சூடிகைக்கும் இது ஓர் அத்தாட்சி.

அதுமட்டுமல்ல ஈழப்பிரச்சினையில் அமைதியான முறையில் அரசியல் ரீதியான தீர்வுகாண்பது என்ற புலிகளின் தீர்மானத்தை பிரதிபலிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில் எடுப்பான ஒன்று என்னவெனில் எத்தகைய கூட்டாட்சி முறை ஈழத்துக்குப் பொருத்தமானது என்பதை நிர்ணயிப்பதில் புலிகள் காட்டி வருகின்ற ஆர்வம்.

தென்னாபிரிக்காவில் சுதந்திர போராட்டத்தை நடத்தி வந்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் - பின்னர் இராணுவ அமைப்பில் இருந்து அரசியல் கட்சியாக புதிய வடிவை எடுத்துக்கொண்டதல்லவா? அந்தப்பாணியைக் கடைப் பிடிப்பதில் புலிகள் சிரத்தை காட்டி வருவதாக கொழும்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எத்தகைய சூழலில் இத்தகைய மாற்றத்துக்கு புலிகள் ஆயத்தமாகி வருகிறார்கள் என்பதைக் கவனிப்பது அவசியம். நோர்வே மூலம் அமைதிப பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதை அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகள் பலமாக ஆதரித்துவருகின்றன.

குறிப்பாக, அமெரிக்க அரசு பயங்கரவாதத்தை கைவிட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வுகாண புலிகள் அமைப்பு முன்வரும் பட்சத்தில், அதன் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்த இரண்டு வாரத்துக்குள்ளாகவே பொருத்தமான கூட்டாட்சி முறையை தெரிவு செய்வதில் புலிகள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆனால், இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி சந்திரிகா அருவருக்கத்தக்க முறையில் நடந்து காட்டி வருகிறார். அமைதி முயற்சிகளையும் போர்நிறுத்தத்தையும் பகிரங்கமாக எதிர்த்து வருகின்ற பேரினவாத அரசியல் அமைப்பான ஜே.வி.பியுடன் அரசியல் ரீதியான கூட்டணி அமைப்பதில் ஜனாதிபதியின் பொ.ஐ.மு. முனைந்திருக்கிறது. சமரச முயற்சிகளுக்கான ஏற்பாடுகளைச்செய்து தந்து வருகின்ற நோர்வேப் பிரதிநிதியை இலங்கையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று கோரிவருவதுடன் போர்நிறுத்தத்துக்கு எதிராக ஆணையிடுமாறு கோரி ஜே.வி.பி. ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

இதே ஜே.வி.பி. 1987 இல் உருவான இந்திய - இலங்கை உடன்படிக்கையை எதிர்த்த அமைப்பு என்பதையும் நினைவுகூ வது அவசியமாகிறது. அக்கட்சியுடன் கூட்டணி அமைத்துக கொள்ளத் தயாராகி வருகின்ற ஜனாதிபதி சந்திரிகா அமைதி முயற்சிகள வெற்றி பெற ஒத்துழைப்பு தருவாரா என்பதே கேள்விக்குறி ஆகி இருக்கிறது. இம்முயற்சிகளைக் குலைக்கும் அளவுக்கும் செல்லத் துணியமாட்டார் என்றும் கூறுவதற்கில்லை.

இதற்கு முக்கிய காரணம் - இவரைத் தனிமைப்படுத்திவிட்டு சர்வதேச அளவில் பலமான ஒத்துழைப்பை நாடிப் பெற்று அதன்மூலம் ஈழப் பிரச்சினைக்கு நிரந்தர பரிகாரத்தை - ரணில் அரசு சாதிப்பதை ஜனாதிபதியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்பதல்லாமல் வேறு என்னவாக இருக்கமுடியும்?

இந்த ஆத்திரத்தால் அல்லது விரக்தியால் ரணில் அரசை கலைத்து விட்டு புதிய தேர்தலுக்கு ஆணையிடக் கூடிய விபரீத முடிவுக்கும் சந்திரிகா வரக்கூடும் என்று கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன. அப்படி நேரும்பட்சத்தில் இலங்கையை கடவுள்தான் காப்பாற்றவேண்டும். (எ)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஆன்மீக முகாமுக்கு ஏற்பாடு

வடமராட்சி மார்ச்7

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம் இலங்கை சின்மயா மிஷனுடன் இணைந்து நடத்தும் ஆன்மீக முகாம் வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 18ஆம திகதி வரை 5தினங்கள் நடைபெறவுள்ள முகாமில் 16வயது முதல் 30வயது வரையிலான இளைஞர்களும் -

20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ள முகாமில் பெரியவர்களும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தியானம் சிந்தனையைத் தூண்டும் ஆன்மீகக் கருத்துரைகள், ஆளுமையை வளர்க்கும் பயிற்சிப் பட்டறைகள், ஐயம் தெளிவிக்கும் கேள்வி பதில், மாலைநேரப் பஜனைகள் என்பன இந்த ஆன்மீக விதிவிட முகாமில் சிறப்பு அம்சங்களாக இடம் பெறவுள்ளன.

ஆன்மீக விழிப்புணர்ச்சியும் அகமறுமலர்ச்சியும் ஏற்படுத்தும் ஆன்மீக முகாமை இலங்கை சின்மியாமிஷனின் வதிவிட ஆச்சாரியாரான பிரமச்சாரி ரமண சைதான்ய சுவாமிகள் நடத்துவார்.

(எ-173)

## அன்னை அபிராமியின் உபாசகி டென்மார்க் நகரில் அற்புதம்

ஆதிபராசக்தியாகத் திகழும் அன்னை அபிராமி அம்பாள் தம்மை வழிபடும் அடியார்களின் இடுக்கண் களைக் களையும் நோக்கில் டென்மார்க் பிரண்டா நகரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள்.

புலம்பெயர்ந்த மக்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் அபிராமி அன்னையை வணங்கித் துதித்து அருள் பெற்று வருகின்றனர்.

**அறியாதார் இல்லை**

உண்மையான பக்தியுடன் நாடுவோர்க்கு அனைத்தையும் அருளும் புதுமைத் தாய் அவள். இந்த அன்



னையானவள் தான் தோன்றி அம்மனாக கடந்த எட்டு வருடங்களாக பிரண்டாப் பகுதியில் அருள்புரிகின்றாள். இந்த அம்மனின் உபாசகி அம்மா பல அற்புதங்களைப் புரிந்து வருகின்றார்.

பிரண்டா நகர் அபிராமி அம்மை ஆலயம் ஆரம்பித்த நாள்களில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அபிராமி உபாசகி அம்மாவின் வயிற்றிலிருந்து வாய் வழியாக இரண்டு மாணிக்கக் கற்கள் வெளிவந்தன. இந்த இரு கற்களையும் நாக சிற்பத்தில் தலையில் பதித்து அபிஷேகம் புரிந்து வருகின்றார் அம்மா. நாகதோஷமுள்ளவர்கள், புத்திரப்பேறில்லாதவர்கள் விசேடமாகச் சனிக்கிழமைகளில் பால், குங்குமம் அபிஷேகம் செய்து பயனடைந்துள்ளனர்.

இந்த ஆலய வீதியில் இருக்கும் மரம் ஒன்றில் குழந்தையுடன் உள்ள தொட்டிலைக் கட்டினால் நிச்சயம் குழந்தைப்பேறுகிட்டும். திருமணமாகாத கன்னியர்கள் அம்மாவிடம் ஆசிபெற்றால் கல்யாணம் நடந்துவிடும். இளைஞர்களும் அம்மாவிடம் வந்து அருள்பெற்று இன்னல் நீங்கியுள்ளனர்.

நேரில் வரமுடியாதவர்கள் கடிதம், தொலைபேசி மூலமாகவும் ஆசிகளைப் பெறுகின்றனர். சுற்றிவர அழகான வயல்வெளியில் நடுவே அமைந்திருக்கின்ற அன்னை அபிராமியின் ஆலயம் டென்மார்க் - பிரண்டா மக்களுக்கு மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகத் திகழ்கின்றது.

இங்கே ஆடி மாத வளர்பிறை திருதியையில் தேர்த்திருவிழாவும் தொடர்ந்து தீர்த்தோற்சவம், பூங்காவனம், வைரவர் பூஜை முதலியன வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. மிகவும் பக்திபூர்வமாக நிகழ்ந்து வரும் இந்தத் திருவிழாக்களில் பல்வேறு வெளிநாடுகளிலிருந்தும் தமிழர்கள் வந்து பக்திஉணர்வோடு கலந்து கொண்டு வழிபாடியற்றி அன்னையின் அருள்பெற்று ஆனந்திப்பர்.

**நடமாடும் தெய்வம்**

தெய்வீக அன்னையின் வாக்கும் அடியார்களின் அயராத ஆக்கபூர்வமான முயற்சியும் ஒருசேர பக்தர்களது இடவசதியையும் நோக்கிற் கொண்டு நிரந்தர ஆலயத்தை அமைக்கின்ற திருப்பணி வேலைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தப் புனிதமான தெய்வீக கைங்கரியம் 23.08.2001 அன்று அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டட நிர்மாணத் திருப்பணிக்கு உதவி அபிராமி அன்னையின் திருவருளுக்குப் பாத்திரமாவதற்கு இது நல்லதொரு வாய்ப்பாகும்.



அன்னையின் வயிற்றில் உருவாகி வாய்வழியே வெளிவந்த கருங்கல் சிவலிங்கம்

ஆகவே, இயன்றளவு நிதியுதவி புரிந்து ஆலயத்திருப்பணிக்கு உதவுவது இந்துக்களின் கடமை.

எனவே, அருள் கொழிக்கும் அன்னையின் ஆலயத் திருப்பணிக்கு உதவுவோர் Uni Bank A/C No 9559 0801614361 என்ற கணக்கு இலக்கத்துக்கு நிதி அனுப்பலாம்.

ஆலயப் பணிக்கு அறக்கொடையகத்தால் அபிராமி அன்னையின் திருவருள் பரிபூரணமாகக் கிட்டும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

**தொகுப்பு:**
**சிவநெறிக் க. லாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

**வெளியீடு:**
**அபிராமி அம்மன் ஆலயம், பிரண்டா, டென்மார்க்.**

## தெய்வீக ஸ்தலங்களில்



கோண்டாவில் வடக்கு ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தினர் அண்மையில் பக்திப்பாமாலை ஒலி நாடாவை வெளியிட்டனர். இந்த வெளியீட்டு நிகழ்வில் வித்துவான் வீரமணிஐயர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.



காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் புதிய சப்பற வெள்ளோட்ட விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப் பட்டபடம். (ஒ-73)

# சமய சந்நிதிகளில்

காரைநகர்,மார்ச்7

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலய வருடாந்த பங்குனி மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

தேர்த்திருவிழா எதிர்வரும் 17ஆம திகதி மு.ப.10மணிக்கும் மறுநாள் காலை 9மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

உற்சவத்தை முன்னிட்டு யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம் வரை விசேட பஸ் சேவை நடைபெறவுள்ளதுடன் ஆலய அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

(எ-73)

★ ★ ★

காரைநகர்,மார்ச்7

காரைநகர் சின்னபுரம் பத்திர காளி கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00மணி முதல் நடைபெறவுள்ளது.

(எ-73)

★ ★ ★

கொழும்புத்துறை,மார்ச்7

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

இம்மாதம் 17ஆம் திகதி திங்கட் கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

(ஒ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்7

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 17ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 18ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

வலி.மேற்கு,மார்ச்7

பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

வேட்டைத்திருவிழா இம்மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தேர்த்திருவிழா 17ஆம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் பூங்காவனத் திருவிழா இம் மாதம் 19ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறவுள்ளன.

(ஒ-175-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்7

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு சோமசுந்தரேசர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

★ ★ ★

சங்கானை,மார்ச்7

சங்கரத்தை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் நாளை சனிக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. உற்சவ தினங்களில் தினமும் பிற்பகல் 5.30மணிக்கு 'ஞானசிரோன்மணி' திருமதி வசந்தா வைத்தியநாதனின் பேருரை இடம் பெறும்.

(ஒ-29)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்7

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை பகல் 12.35 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12நாள்கள் இடம் பெறும் உற்சவ நிகழ்வுகளில் எதிர் வரும் 16ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 17ஆம திகதி நண்பகல் 12மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 18ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் நடைபெறும்.

(ஒ-15-135)

# III PRESIDENT



**PRESIDENT CFL**

பல்புகள் தற்போது இலங்கை தர நிர்ணய சபையின் (SLSI) சிறந்த மின்சார சேமிப்பை உறுதிபடுத்தும் நட்சத்திர தராதரத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது, என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

அத்துடன் இலங்கை மின்சார சபையின் இலகு தவணை திட்டத்திலும் கிடைக்கும்

80 % சேமிப்பு

ஒரு வருட உத்தரவாதம்

குடா நாடெங்கும் கிடைக்கும்

ISO 9002

போலிகள் தொடர்பாக விழிப்பாயிருங்கள்



**சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)**

**பொது முகாமையாளர் பதவி நிரந்தரம் 101/07**

# வெற்றிடம்

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து (இரு பாலாரும்) உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் ரூபா 10/- செலுத்திச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் *'தலைவர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை'* என விலாசமிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டுப் பதிவுத் தபால்மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பப்படல்வேண்டும். சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

1. சம்பள அளவுத் திட்டம்
   கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை.
   இல. 31/99 அமைய
   5500 - 8200
   130 தர 10 - 140 தர 10
2. தகைமைகள்:
   அ. கூட்டுறவு பணியாளர் 8ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவம்
   அல்லது
   இ. கூட்டுறவு பணியாளர் உயர்தராதரப் பத்திரம் / க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.
3. வயதெல்லை 18 - 45
4. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

விண்ணப்ப முடிவு திகதி: 21-03-2003

05.03.2003 ஒப்பம்: கா.நடராசா
(C/26815) தலைவர்.



# ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இல் வெற்றிடங்கள்

| | |
|---|---|
| தளபாட நச்சுதொழிலாளர்கள் | சம்பளம் 700 - 800 Dhs |
| சாரதிகள் (மத்திய கிழக்கு வாகன அனுமதிப்பத்திரத்துடன்) | சம்பளம் 1000 Dhs 300 Dhs (உணவு கொடுப்பனவும், மேலதிக நேர ஊதியமும் வழங்கப்படும்) |

<u>நிபந்தனைகளும் விதிகளும்</u>

இலவச உணவு, இலவச மருத்துவ வசதி, இலவச தங்குமிட வசதி, ஒப்பந்தகால முடிவில் இலவச ஒருவழிப் பயணச்சீட்டு, ஒப்பந்தகாலம் மூன்று வருடங்கள். ஏனையவை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இன் தொழிற்சட்டங்களின் படி வழங்கப்படும். கடவுச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டு போட்டோ பிரதிகள் ஆறு மற்றும் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

## ஒறியன்ற் லிங்க் (தனி) நிறுவனம்

இல. 12, மக்லியட் றோட்
கொழும்பு - 4
தொ.பே. 505669

(பம்பலப்பிட்டி தொடர்மாடிக்கு எதிராகவும் பான் ஏசியா வங்கிக்கு அடுத்ததாகவும்)

உரிமம் - 1176

அங்கீகாரம் இல - AL/1176/ADVT/04/2003


## சீருடைத்துணி முத்திரைகள் விநியோகம்

தென்மராட்சி,மார்ச்7

தென்மராட்சி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணி முத்திரைகள் பிரதேச செயலகத்தினால் அந்தந்த கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் தமது சீருடை முத்திரையினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் ம.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-117)

## மின்சாரம் தருமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய்,மார்ச்7

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு இதுவரை மின்சார விநியோகம் செய்யப்படவில்லை என்றும் விரைவில் இதற்கான நடவடிக்கையை மேற் கொள்ளுமாறும் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் வேண்டுகோள விடுத்துள்ளது. (ஓ-135)

## ஒன்று கூடல்

தென்மராட்சி,மார்ச்7

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடல்நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். (எ-117)

## பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்7

யுத்தத்தினால் பாதிப்படைந்த யாழ் குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென ஒரு தொகுதி தளபாடங்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன.

நிக்கொட் உதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சுமார் 60 பாடசாலைகளுக்கே இத் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஒரு தொகுதி தளபாடங்கள் வரவேண்டியுள்ளதாகவும் -

அவை வந்து சேர்ந்ததும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

## புராண படனப்போட்டி

சண்டிலிப்பாய்,மார்ச்7

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் இவ்வருடத்திற்கான புராணபடனப்போட்டி இம்மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி தரம் 10 முதல் 13 வரையிலான வகுப்பு மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளதாகவும் -

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக போட்டி நடைபெறும் என்றும் -

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தேர்வுச் செயலாளர் இல.125, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் - சங்க செயலாளர் சைவப்புலவர் சு.செல்வதுரை அறிவித்துள்ளார்.

புராணபடனம் பற்றிய விளக்க வகுப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

# பொற்புலவு மயானத்தை பாவிப்பதை தவிருங்கள்!

### பிரதேச சபை செயலாளர் வேண்டுகோள்

தென்மராட்சி,மார்ச்7

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அல்லாரை பொற்புலவு மயானத்தை பொதுமக்கள் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி, மீசாலை, வேம்பிராய், கச்சாய் ஆகிய மயானங்கள் சீருடையினரால் பொதுமக்கள் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததை அடுத்து அல்லாரை பொற் புலவு மயானம் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுவந்தது.

தற்போது வேம்பிராய் கண்ணாடிப்பிட்டி மயானங்கள் பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டதை அடுத்து - சுகாதார சீர்கேட்டை தவிர்க்கும் முகமாக - இந்த மயானங்களையே பயன்படுத்துமாறு பிரதேச சபையின் செயலாளர் கு.நா.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ-117)





முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412:1996
License No : KM41240

Access Graphics

ஏக முகவர்கள்
செண்ற் அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 334261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்**

**யாழ்.மாவட்டம்**

# பதவி வெற்றிடங்கள்

யாழ்.மாவட்டத்தில் யுனிசெவ் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் மிதிவெடி அபாய கல்வித் திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வெளிக்கள இணைப்பாளர் Field Cordinatar**
   வெற்றிடம் : 01 மாதாந்த வேதனம் ரூபா 6000.00
   தகைமைகள் : G.C.E. A/L திறமைச் சித்தி
   கணனி அறிவும் ஆங்கிலத்தில் பேச, எழுத சரளமான அறிவும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்.
2. **வெளிக்கள உத்தியோகத்தர் Field Officers**
   வெற்றிடம் : 08 மாதாந்த வேதனம் ரூபா 5000.00
   தகைமைகள் : G.C.E. A/L சித்தி
   மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உள்ளோர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக் கோவையையும் 12.03.2003 அன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்கவும். நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்
13, சோமசுந்தரம் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(15301)


# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் தனபாலன் லெஸ்லி

(பாலன்)

சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய தனபாலன் லெஸ்லி (பாலன்) 04.03.2003 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் இராசம்மாவின் அன்புப் புதல்வனும் D.D.ஜோர்ச், தர்மரோகினி (ரதி), T.T. ரெறன்ஸ் (ரவி), தனசீலி கிப்பொலிற்றா, தனசீலன் வெஸ்லி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசிந்தா, ஞானசீலன், மல்லிகா (செல்லமணி), கில்டா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-03-2003) வெள்ளிக்கிழமை பாரிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யுவசக்தி வீதி,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.*

(சி-26822)

தகவல்
T.T.ரெறன்ஸ் (ரவி)
சகோதரன்

# பிரஜா உரிமைகள் திருத்தச் சட்ட விவாதம்: நாடாளுமன்றில் சதாசிவம் எம்.பி. சன்னதம்!

## ஆறுதல் சொல்லப் போனவர்கள் வாங்கிக் கட்டினர்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படை சிறப்புரிமைகள் மறுக்கப்படுகின்றன என ஆவேசமாகப் பேசுகின்றார் பொ.ஐ.மு. உறுப்பினர் சதாசிவம். சபை நடுவில் வந்து அமர்ந்து கொண்டு ஆர்ப்பாட்டமும் செய்கின்றார் சந்தர்ப்பத்தைக் கோட்டைவிட்டு - தூங்கி வழிந்து கொண்டிருந்து விட்டு - கூத்தாட வேண்டாம் என்கிறார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர்.

ஏட்டிக்குப் போட்டியான இந்த சுவையான சம்பவங்கள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றன. சபை அமர்வுகள் 35 நிமிடங்கள் மட்டுமே என்றாலும் கலகலப்பாகவும் சூடாகவும் காணப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு குழுக்களின் பிரதித்தலைவர் சிறி.ஹெந்திரா ஹென்னெதி தலைமையில் சபை கூடியது.

நாடாளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தின் படி மத்தியஸ்த (விசேட பிணக்குகள்) சட்டவரைவும் பிரஜாவுரிமை (திருத்தச்) சட்ட மூலத்தின் குழுநிலை விவாதமும் இடம்பெற வேண்டும்.

எனினும், மத்தியஸ்த விசேட பிணக்குகள் சட்ட மூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்திருப்பதால் அப்பிரேரணை தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும் வரை பின்போடப்பட்டிருப்பதாக குழுக்களின் பிரதித் தலைவர் சபையில் அறிவித்தார்.

எனவே, பிரஜாவுரிமைகள் திருத்தச் சட்டவரைவு குழு நிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த ஜனவரி 29ஆம் திகதி இவ்விடயம் விவாதிக்கப்பட்டபோது மலையகப் பிரதிநிதிகளான வி.புத்திரசிகாமணி, எஸ்.சதாசிவம் ஆகியோரால் சில திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்திலேயே சபை ஒத்திவைக்கப்பட்டது. இதனால் பிரஜாவுரிமைத்திருத்தச் சட்டம் குழு நிலையில் பரிசீலனை செய்யப்படும் போது எம்.பிக்கள் முன்மொழிந்த திருத்தங்கள் சேர்த்துக்கொள்ளப்படும என அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் நேற்று

### நாடாளுமன்றத்திலிருந்து.....

முன்தினம் இவ்விடயம் குழு நிலையில் ஆராயப்பட்டபின் மூன்றாவது வாசிப்புக்கு அது விடப்பட்டது.

அப்போதுதான் சதாசிவம் எம்.பி. ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததன்படி தன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூன்று திருத்தங்கள் சபையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவாய்ப்பளிக்கவில்லை என்று ஆட்சேபனை ஒன்றை எழுப்பினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வந்தது வம்பு. பிரஜாவுரிமை திருத்தச் சட்டம் குழுநிலையில் பரிசீலிக்கப்பட்டு இப்போது மூன்றாவது வாசிப்புக்காகவும எடுக்கப்பட்டுவிட்டது. இதுவரை தூங்கிக் கொண்டிருந்த சதாசிவம் எம்.பி., இப்போது கனவுகண்டதுபோல் உளறுகின்றார் என நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் கூறினார். இதனால் அமைச்சர் அஸ்வருக்கும் சதாசிவம் எம்.பிக்கும் இடையில் பலத்தவாக்குவாதம் ஏற்பட்டது.

சதாசிவம் எம்.பியின் கூற்றின்படி, திருத்தம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குழுநிலை விவாதத்தின போது சபைக்குத் தலைமை தாங்குபவர், உறுப்பினரின் பெயரில் சட்டத்தில திருத்தம் ஒன்று உள்ளது என சபைக்கு அறிவிக்கவேண்டும். ஆனால், தலைவர் அதைச் செய்யத்தவறிவிட்டார். இதனால் ஓர் உறுப்பினரின் அடிப்படை சிறப்புரிமை மறுக்கப்பட்டுள்ளது என சதாசிவம் எம்.பி.வாதிட்டார்.

ஆனால், அரச தரப்பினர் எது எப்படியோ சபை விதிகளின்படி குழு நிலை விவாதம் முடிந்துவிட்டது. இனி மேல் திருத்தம் தொடர்பாகப் பேச முடியாது என்று சட்டம் பேசினர். இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட தொழில், தொழில் வாய்ப்புகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் சதாசிவத்திடம் வாங்கிக் கட்டிக்கொண்டார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பிரஜாவுரிமை சட்டம் விடயமாக அரசுடன் பேச்சு நடத்தி உள்ளார். அவர் சில திருத்தங்களையும் சமர்ப்பித்துள்ளார். அதனை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

ஆறுமுகம் தொண்டமான் தொழில் அமைச்சருக்கு பெரிதாக இருக்கலாம். அவர் பின் செல்லலாம். ஆனால், எமது மக்களின் பிரச்சினை தொடர்பாகப் பேசும் உரிமை எமக்கு உண்டு என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்" என சதாசிவம் எம்.பி. அமைச்சருக்குப பதிலடி கொடுத்தார்.

இதைப் பயன்படுத்திக் கொண்ட ஜே.வி.பியினரும் பொ.ஐ.முவினரும் சப்பைக் கட்டு கட்டிக் கொண்டு சத்தம் போட்டனர்.

ஆனால், உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, சதாசிவம் எம்.பியை சற்று ஆறுதல்படுத்தினார்.

அதாவது, இப்போது சமர்ப்பிக்கப பட்டுள்ள பிரஜாவுரிமை சட்டத்திற்குப் புறம்பாக நாடற்றவர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கும் திருத்தச் சட்ட வரைவு ஒன்று சட்டமா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் சில குறைபாடுகள் காணப்பட்டுள்ளன. பிழைகள் திருத்தப்பட்ட பின் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் உறுதியளித்தார்.

அப்படியானால் இதை எப்போது செய்வீர்கள்? என்று சதாசிவம் எம்.பி. அமைச்சரிடம் கேட்டபோது, சட்டமா அதிபர் திணைக்களம் திருத்தங்களுடன் எனக்கு சமர்ப்பித்தால் மறுதினமே அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என்று அடித்துக் கூறினார் அமைச்சர் ஜோன அமரதுங்க.

என்றாலும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசு இந்த விடயத்தைத் திட்டமிட்டே இழுத்தடிக்கின்றது. உறுப்பினர்களின் சிறப்புரிமை மறுக்கப்படுகின்றது எனக் கூறி சபை நடுவில் வந்து அமர்ந்து கொண்டார் சதாசிவம் எம்.பி.

ஆனால், இவருடைய துரதிஷ்டம், ஒத்திவைப்பு பிரேரணை கொண்டுவரவிருந்த உறுப்பினர் சமுகமளித்திருக்காததால் சபை அமர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டன. ஆர்ப்பாட்டம் எடுபடவில்லை சபை கலைந்துவிட்டது.(ஒ)

# நாடாளுமன்றம் 35 நிமிடங்கள் மட்டுமே நேற்றுமுன்தினம் கூடிக் கலைந்தது!

கொழும்பு,மார்ச்7

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் 35நிமிடங்கள் மட்டுமே கூடிக் கலைந்தது. சபை ஒத்திவைப்பு வேளையின் போது பிரேரணையை முன்மொழியவிருந்த உறுப்பினர், சபையில் பிரசன்னமாகியிராததால் சபை நடவடிக்கைகள் நேற்றுக் காலை பத்து மணி. வரை ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு குழுக்களின் பிரதித் தலைவர் சிறிஹெந்திரா ஹென்னெதி தலைமையில் கூடியது.

வழமைபோல் வாய்மூல கேள்விகளுக்குப் பதில்கள் அளிக்கப்பட்டன. நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் 15கேள்விகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மூன்று உறுப்பினர்கள் மட்டுமே சபையில் இருந்து கேள்விகளை எழுப்பினர்.

தொடர்ந்து கடந்த கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பிரஜாவுரிமை திருத்தச் சட்டம், குழுநிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பரிசீலனையின் பின் மூன்றாவது வாசிப்பு இடம்பெற்றபோது நுவரெலியா மாவட்ட எம்.பி.சதாசிவம் தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களை சபையில் சமர்ப்பிக்க அவகாசம் அளிக்கவில்லை என ஆட்சேபனை எழுப்பினார். எனினும், சபை குழு நிலையில் இருந்து மாறியபின் எதுவும் செய்யமுடியாது என அவரது ஆட்சேபத்தை அமைச்சர் நிராகரித்து விட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சதாசிவம் எம்.பி.தனது ஆட்சேபனையைத் தெரிவிக்கும் வகையில் சபை நடுவில் வந்து அமர்ந்துகொண்டார். அதே வேளை ஒத்திவைப்பு பிரேரணையை சமர்ப்பிக்கும்படி பொ.ஐ.மு. உறுப்பினரான மஹிந்த யாப்பா அழைக்கப்பட்டார். ஆனால், அவர் சபையில் இருக்கவில்லை.

இதனால் சபை அமர்வுகள் காலை 10.35 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

(ஒ)


## யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
(ஸ்ரான்லிக் கல்லூரி)
## பவள விழா

*அன்புடையீர்!*

*எமது பாடசாலையின் பவளவிழாவினை எதிர்வரும் ஓகஸ்ட மாதத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாட பாடசாலைச் சமூகத்தினராகிய நாம தீர்மானித்துள்ளோம். எனவே, எமது பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் எமது கல்லூரியில் அமைந்துள்ள பவளவிழா இணைப்பாளர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.*

பொன்.தர்மேந்திரன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

பூ.குகதாசன்
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(சி26830)

வி.மாணிக்கம்
அதிபர்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.



## BARATHY
## கல்வி நிறுவனம், சித்தன்கேணி.

*மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்*
*மீண்டும் சித்தன்கேணி மண்ணில்*

பொருளியல்
திரு. S.மகேந்திரன்

**A/L 2004, 2005**

**ஆரம்பம்: நாளை (சனி 08.03.2003) அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.**

***NOTE:-*** **சித்தன்கேணியில் பிரபல்யம் பெற்ற இப்பொருளியல் ஆசிரியரின் வகுப்புகள் நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் எமது நிறுவனத்தில் ஆரம்பமாகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.**

(15304) - நிர்வாகி -



## பருத்தி நகரில் இன்று ஆரம்பமாகின்றது !

## e Village Computer Park

*Towards better future through Informatio Technology*

15.03.2003 ற்கு
முந்திய அனுமதிகளுக்கு
விசேட கட்டணச் சலுகைகள்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- அனுபவம் வாய்ந்த கல்வியாளர்களின் போதனை
- கற்கைக்கு ஏதுவான வகுப்பறைச் சூழல்
- கூடுதலான செய்முறை வகுப்பிற்குரிய நேரங்கள்
- இலகு தவணைக் கட்டணக் கொடுப்பனவுகள்
- இலகு தவணைக் கட்டடங்களில் கணணிகளை கொள்வனவு செய்யும் வசதி
- தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 100% புலமைப்பரிசில்
- மாணவர்களின் நேரத்திற்கு உகந்தபடி தேர்வு செய்யக் கூடிய நேரசூசி
- நவீன கணனி யுகத்திற்கேற்ப திட்டமிடப்பட்ட பாட அலகுகள்
- சிறுவர்கள், மாணவர்கள், வயது வந்தவர்களுக்கென்று வகைப்படுத்திய பகல் நேர பகுதி நேர வகுப்புக்கள்
- இலவசமான கணணி முன்னறிவுப் போதனைகள்
- சிறப்புத்தேர்ச்சி பெற்ற வன் பொருள் நுட்பவியலாளர்களால் வன் பொருள் செய்முறை வகுப்புக்கள்

மேலதிக தொடர்புகளுக்கு

இ–வீலேஜ் கணணிப் பூங்கா
பிரதான வீதி, கிராமக் கோடு,
பருத்தித்துறை.



## சுன்னாகம் தாளையடி அருள்மிகு ஐயனார் தேவஸ்தானம்
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

| | |
|---|---|
| கொடியேற்றம் | :- 08.03.2003 சனிக்கிழமை பகல் 11.00 மணி. |
| வசந்தோற்சவம் | :- 13.03.2003 |
| வேட்டைத்திருவிழா | :- 15.03.2003 |
| சப்பரம் | :- 16.03.2003 |
| தேர் உற்சவம் | :- 17.03.2003 |
| தீர்த்தோற்சவம் | :- 18.03.2003 |
| பொங்கல் | :- 23.03.2003 |

**மஹோற்சவ பிரதம குரு :-**
முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்.
*(சுன்னாகம் கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்)*

தினமும் பகல் திருவிழா காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி, நண்பகல் 12.00 மணிக்கு நிறைவுறும். மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி 9.00 மணிக்கு நிறைவுறும். தேர், தீர்த்தம் இருதினங்களும் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழாக் காலங்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை சிவத்திரு. வ.குமாரசாமிஜயா அவர்களின் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

**ஆதீனகர்த்தாக்கள் :-**
திரு. சி.ஐ.கந்தசாமி திரு. பெ.வாமதேவன்

சி.குமாரவேல் *தலைவர்.* த.ஸ்ரீவரதலிங்கம் *தனாதிகாரி.* சி.செ.நடராஜா *செயலாளர்.*

பரிபாலனசபை, ஐயனார் தேவஸ்தானம், சுன்னாகம்.

(15300)



## அலங்கார உற்சவ பெருவிழா

மீசாலை வடக்கு, ஆலடிப்புலம் ஸ்ரீ நடராசா கந்தசுவாமி ஆலய அலங்கார உற்சவம் இன்று (07.03.2003) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 18.03.2003 செவ்வாய்க்கிழமை பூர்த்தியாகும். தினமும் காலை 10.00 மணிக்கு அபிஷேகமும், விசேட பூஜையும் நிகழும் இரவு 7.00 மணிக்கு விசேட தீபாராதனையும் முருகப் பெருமான் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் முருகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

வஐஸ்ரீ குமரா ஸ்ரீகாந்தக் குருக்கள்
*ஆதீன தர்மகர்த்தா.*

பிரசுர அன்பளிப்பு:

**திருமுருகன் ஸ்ரூடியோ**
**டிஜிரல் போட்டோ, அன்ட் வீடியோ**
கண்டி வீதி, புத்தூர் சந்தி,
மீசாலை. (C-26829)

## ஆக்கத்திறன் கண்காட்சி

கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் சமூகக்கல்வி ஆக்கத்திறன் கண்காட்சிப் போட்டி நாளை காலை 9 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் அன்றையதினம் காலை 8 மணிக்கு முன்பதாக தமது பொருள்களை காட்சிக்கு வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-72)

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் தேவை.
*தொடர்பு:* **சிவா**
இராமலிங்கம் வீதி,
முடமாவடி. (C/26825)

## யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு பொருள்கள் வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2003

யாழ்.மாநகரசபைக்கு கீழ்காணும் பொருளகளை வழங்கக் கூடியவர்களை 20.03.2003 ஆம் திகதிவரை பதிவுசெய்யப்படும். தேவையான விவரங்களை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

**01) பொச்சு மட்டைகள்**

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம். (C-26828)    திகதி: 06.03.2003

## கண்ணீர் அஞ்சலி

சைவப்புலவர், வித்துவான், சித்தாந்தசிரோமணி, கலாபூஷணம்

### வைரவப்பிள்ளை செல்லையா

அவர்கள் 2003.03.06 வியாழன் காலை 11.30 மணியளவில் வவுனியா, குருமன்காடு இல்லத்தில் சிவபதமடைந்தமையை அறிந்து அகில இலங்கைச சைவப்புலவர் சங்கத்தினர் ஆழ்ந்த துயருடன் தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி பெறவும் மனைவி, மக்கள், உறவினர் ஆறுதலடையவும் ஆடவல்லான் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றனர்.

125, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(15307)    அகில இலங்கை
சைவப்புலவர் சங்கம்.

## விநியோகஸ்தர்கள் தேவை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிருக மருந்துத் தயாரிப்புகளை விநியோகம் செய்ய விரும்பும் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பிறவுண் அன் கம்பனியின் மிருக மருத்துவப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**கடிதம் அல்லது தொலைபேசி மூலம்**
**உடன் தொடர்பு கொள்ளவும்.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-
உதவிப் பொது முகாமையாளர்

காட்சியறை
வரையறுக்கப்பட்ட பிரவுண் அன் கம்பனி
89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2225150

BROWNS GROUP BG ESTD 1875

மிருக மருத்துவப் பிரிவு
வரையறுக்கப்பட்ட பிரவுண் அன் கம்பனி
481, டி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி : 01-694118 அல்லது 697111

intervet    ZAGRO    Biomin

## மரண அறிவித்தல்

### Dr. வினாசித்தம்பி ஆழ்வாப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி - R.M.P.)*

பருத்தித்துறை, ஆத்தியடியைச் சேர்ந்த Dr. வினாசித்தம்பி ஆழ்வாப்பிள்ளை நேற்று (06.03.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் தேவசுந்தரியின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி, செல்வதேவி, கதிர்காமலிங்கம், உருக்குமணிதேவி, கணேசலிங்கம், இரதிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவபாலன், தங்கவடிவேல், பரமேஸ்வரி, கணேசன், றோகினி, இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வக்குமார், நிர்மலா, தில்லைராஜன் உதயகலா, இரவீந்திரன் வள்ளிமணி, ரங்கராஜன் பவாணி, சுந்தர் ஆரணி, முருகவேல் வாசுகி, ஸ்ரீஸ்கந்தராஜா சிந்திரா, ஞானவேல் அனுசியா, கேசவன், கேதீசன், அம்பிகா அபிராமி, கௌரிகாயத்திரி, குந்தவி, கவிராஜ், கோகுலராஜ், வைதேகி, குமுதா, குகன் ஆகியோரின் அன்புப் பேரனும் விதுனா, சுஜீத்தா, யசோதரா, விதன், பிரசன்னா, பிரவீனா, நிரஞ்சன், துவாரகன், துளசி, மலரவன், சுமங்கலியா, சித்திரதீபன், சித்திரசீலன், சித்திரமீரன், நகுலன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.03.2003) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.கதிர்காமலிங்கம் (மகன்)
(அதிபர், *Hotel School, Jaffna*),
ஆ.இரவீந்திரநாதன் (மருமகன் - ஆசிரியர்).

*ஆத்தியடி,*
*பருத்தித்துறை.* (C-26821)

# மக்கள் வங்கி

**31.12.1984 வரை அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் பின்வரும் திகதிகளில்**

## பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்

| கிளைகளின் விவரம் | ஏலம்விடப்படும் திகதி | ஏலம்செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ். பிரதான வீதிக் கிளை | 15. 03. 2003இல் இருந்து 19. 03. 2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| நெல்லியடிக் கிளை | 20. 03. 2003இல் இருந்து 23. 03. 2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |

## "வனிதா வாசனா" 2002 பரிசளிப்பு விழாவும் "ஜெயஸ்ரீ" பரிசளிப்பு விழாவும்

மகளிர் தினமான எதிர்வரும் 08-03-2003 அன்று சனிக்கிழமை காலை 9 மணி - நண்பகல் 12.30 வரை மக்கள் வங்கியின் இணைந்து கிளைகளும் திறந்திருக்கும். அன்று கடந்த வருடம் நடைபெற்ற "ஜெயஸ்ரீ" பரிசுத் திட்டத்தில் பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கும், "வனிதா வாசனா - 2002" பரிசுத் திட்டத்தில் பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கும் பரிசில்கள் அந்தந்தக் கிளைகளில் வைத்து வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

மகளிர் தினமான அன்று ஆரம்பிக்கப்படும் "வனிதா வாசனா" கணக்குகளுக்கான சீட்டிழுப்பில் வெற்றிபெறுவோரின் வைப்புத்தொகை இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும்.

மேலும் இக்கணக்கில் ருபா 10,000 இற்கு மேல் மீதி பேணப்படின் மாதாந்த "ஜெயஸ்ரீ" சீட்டிழுப்புக்கு தாங்களும் தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டசாலியாகும் வாய்ப்பு தங்களுக்கும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி.

(சி26824)